Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, APRIL 12, 2021

வெள்ளிக்கிழமை ஓகஸ்ட் 12, 2022 | ஒளி: 08 கதிர்: 073 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ FREE

## முட்டை விலையும் மீண்டும் எகிறியது



முட்டையின் விலையும் கோழி இறைச்சியின் விலையும் மீண்டும் அதிகரித்துள்ளதால் தாம் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர். முழுச் செய்தி P2


## 3 முக்கிய செயல்முறைகளின் முக்கியத்துவம் அவசியமாகும்



தற்போது இலங்கை எதிர்கொண்டுள்ள நெருக்கடியான தருணத்தில், ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையின் பங்குதாரராக இருந்து இலங்கைக்கான ஒத்துழைப்புகளை பெற்றுக்கொடுக்க தயாராக இருப்பதாகவும், அதேபோல் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை, சர்வதேச நாணய நிதியம், மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகிய மூன்று வெளிவிவகார விடயங்களில் இலங்கை அரசாங்கம் வெற்றியடைய உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று நம்புவதாகவும் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் ஜனாதிபதி ரணிலிடம் தெரிவித்துள்ளனர். முழுச் செய்தி P2

### சிவகரன்

## 4ஆம் மாடிக்கு அழைப்பு





■ றொசேரியன் லெம்பர்ட்

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரனை, எதிர்வரும் 15ஆம் திகதி விசாரணைக்காக 4ஆம் மாடிக்கு அழைப்பு விடுக்கப்ப ட்டுள்ளது. முழுச் செய்தி P2

### பாங்கொக்கில் தங்குகிறார் கோட்டா

# வேறொரு நாட்டை தேடும்வரை 90 நாள் அனுமதி

**இலங்கை அரசாங்கமும் தாய்லாந்துக்கு கோரிக்கை விடுத்ததாம்**
**ஏந்தவோர் அரசியல் நடவடிக்கைகளும் அனுமதிக்கப்படாது**
**ஹோட்டல், வாடகை குடியிருப்பு அல்லது வீட்டில் தங்க முடியும்**

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவுக்கு நிரந்தர புகலிடம் அளிக்கும் விதமாக வேறொரு நாட்டை அவர் தேடும் வரையில், தற்காலிகமாக நாட்டில் தங்குவதற்கு தாய்லாந்து இணங்கியுள்ளதாக தாய்லாந்து பிரதமர் பிரயுத் சான்-ஓ-சா தெரிவித்துள்ளார்.

மனிதாபிமான அடிப்படையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும், அதற்கமைய 73 வயதான இலங்கை தலைவரின் கோரிக்கையை தாய்லாந்து கருத்தில் கொண்டு தற்காலிகமாக இந்த அனுமதியை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றார். முழுச் செய்தி P2




### 22 ஆவது திருத்தத்தை

# ஒருமனதாக நிறைவேற்றுவது பிரதிநிதிகளின் கடமையாகும்

இலங்கையின் ஜனநாயக ஆட்சி முறைகளை கடுமையாக திரிபடையசெய்து, சர்வாதிகார ஆட்சிக்கு வழிவகுத்த அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்தை இரத்துச் செய்துவிட்டு, அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை எண்ணி மகிழ்ச்சி அடைகின்றேன் என்று தெரிவித்துள்ள முன்னாள் சபாநாயகரும் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவருமான கரு ஜயசூரிய, இந்த நடவடிக்கையை 19ஆவது திருத்தத்தை மீள அமலாக்கும் முற்போக்கான நடவடிக்கையாகவே கருதுகின்றோம். ஆகையால், 22 ஆவது திருத்தத்தை மக்கள் பிரதிநிதிகள், ஒருமனதாக நிறைவேற்றுவதே அவர்களின் கடமையாகும் என்றும் தெரிவித்துள்ளார். முழுச் செய்தி P2



## கர்தினாலுக்கு கொரோனா



பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு கொவிட்- 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், தற்போது அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும், ஒரு சில நாள்களில் அவர் மீண்டும் பேராயர் இல்லத்துக்கு திரும்புவதற்கான சாத்தியப்பாடுகள் இருப்பதாகவும் பேராயர் இல்லம் தெரிவித்துள்ளது. முழுச் செய்தி P2

## இன்றுடன் 2,000ஆவது நாள்

### சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம்




இறுதிக்கட்ட யுத்த காலகட்டத்தில் வடக்கு, கிழக்கில் வலிந்து காணமால் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் இன்று (12) தமது தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தின் 2,000 ஆவது நாளை அடையாளப்படுத்தும் விதமாக, கிளிநொச்சியில் கவனயீப்பு போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர். முழுச் செய்தி P2

### கூட்டமைப்புக்குள்


## உள்ளக மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்

■ பாறுக் ஷிஹான்



தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் உள்ளக மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்றும் சாணக்கியன் போன்ற இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கி கூட்டமைப்பை வழிநடத்த வேண்டும் என்றும் அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. முழுச் செய்தி P2

## ஓட்டோக்கள் குறித்து அறிக்கை தயாரிப்பு



கட்டணம் அறவிட்டு முழுநேர பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு போக்குவரத்து அமைச்சுக்கு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது. முழுச் செய்தி P2

## மாகாண சபையின் செலவை நிர்வகியுங்கள்

### சகல மாகாண ஆளுநர்களுக்கும் ஜனாதிபதி அறிவிப்பு



மாகாண நிர்வாகம், அபிவிருத்தி செயன்முறைகளை ஒழுங்கான முறையில் பேணுதல் மற்றும் மாகாண சபையின் செலவினங்களை நிர்வகித்தல் போன்ற பொறுப்பு ஆளுநர்களிடம் ஒப்படை க்கப்பட்டு உள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம், செயலாளர் சமன் ஏக்கநாயக்க இது தொடர்பில் அனைத்து மாகாண ஆளுநர்களுக்கும் எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. முழுச் செய்தி P2

### 'ஒரே நாடு; ஒரே சட்டம்'

# செயலணியின் அறிக்கையை நடைமுறைப்படுத்த வேண்டாம்

'ஒரே நாடு; ஒரே சட்டம்' என்ற செயலணியின் அறிக்கையை நடைமுறைப்படுத்த வேண்டாம் என ஜனாதிபதியிடம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் விடுத்த வேண்டுகோளுக்கு, ஜனாதிபதி உடன்பட்டுள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார். முழுச் செய்தி P2



## உணவுப் பொருட்களின் விலைகள் மீண்டும் கூடும்

மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளமையால், உணவுப் பொருட்களின் விலைகள் மீண்டும் அதிகரிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக உணவக உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். "அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டாலும் அதன் பலனை நுகர்வோர் அனுபவிக்கும் வகையில் பொறிமுறையொன்றை நுகர்வோர் அதிகார சபை ஏற்படுத்தவேண்டும்" என்று அகில இலங்கை உணவக உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் கேட்டுக்கொண்டுள்ளார். முழுச் செய்தி P2



# 'யுவான் வாங் 5' கப்பலுக்கு அனுமதி கிடைக்கவில்லை



சீனாவின் ஆய்வுக்கப்பலான 'யுவான் வாங் 5' கப்பலை இலங்கை கடல் எல்லைக்குள் அனுமதிக்குமாறு இதுவரை அரச மேலிடத்தில் இருந்து எவ்வித தகவலும் வழங்கப்படவில்லை என இலங்கை துறைமுக அதிகார சபையின் துறைமுக அதிகாரி நிர்மல் சில்வா தெரிவித்துள்ளார். இந்நிலையில், இலங்கைக்கு வரும் திசையை மாற்றிக்கொண்டு, குறித்த கப்பல் வேறு திசை நோக்கி பயணிக்கும் வாய்ப்புகள் உள்ளதாகவும் ஒருசில சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. முழுச் செய்தி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## 3 முக்கிய செயல்முறைகளின் முக்கியத்துவம்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பொன்று புதன்கிழமை (10) இடம்பெற்றுள்ளது. இதன்போது இலங்கை எதிர்கொண்டுள்ள நெருக்கடியான தற்போதைய தருணத்தில் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையின் பங்குதாரராக இருக்கும் எனவும், இலங்கைக்கான ஒத்துழைப்புகளை பெற்றுக்கொடுக்க தயாராக இருப்பதாகவும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

இலங்கையை மீண்டும் சரியான பாதையில் கொண்டு செல்ல, கூட்டு ஒத்துழைப்பு நடவடிக்கைகள் மிகவும் அவசியமானது எனவும் ஒன்றியப் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடத்தில் வலியுறுத்தியுள்ளனர். அதேபோல் இலங்கை மக்களின் சிவில், மனித உரிமைகள், கருத்து சுதந்திரம் மற்றும் கருத்து வேறுபாடு உரிமை ஆகியவற்றை பாதுகாப்பது மிகவும் அவசியம் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும், ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை, சர்வதேச நாணய நிதியம், மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகிய மூன்று வெளிவிவகார நடவடிக்கைகளில் முக்கியமாக கவனம் செலுத்துமாறும் இந்த செயல்முறைகள் வெற்றியடைய அரசாங்கத்தால் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று ஐரோப்பிய ஒன்றியம் நம்புவதாகவும் பிரதிநதிகள் ஜனாதிபதி ரணிலிடம் தெரிவித்துள்ளனர்.

## முட்டை விலையும்...

கோழி முட்டையொன்றின் விலை 58 ரூபாய் முலை 60 ரூபாய் வரையிலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோகிராம் நிறையைக் கொண்ட கோழி இறைச்சியின் விலை 1,500 ரூபாய் முதல் 1,700 ரூபாய் வரையிலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.



இதனால், கோழி இறைச்சியை உணவாக எடுத்துக்கொள்வது, பிள்ளைகளுக்கு முட்டை அடங்கிய உணவை கொடுப்பதில் பாரிய சிரமங்களுக்கு தாம் முகங்கொடுப்பதாக பெற்றோரும் தெரிவித்துள்ளனர்.

கோழிக்கான தீவனத்தின் விலைகள் அதிகரிக்க ப்பட்டுள்ளமையால், முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

## வேறொரு நாட்டை தேடும்வரை 90 நாட்கள் அனுமதி

வேறொரு நாட்டில் நிரந்தர புகலிடம் தேடும் வரையில் தாய்லாந்தில் எந்தவோர் அரசியல் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள மாட்டேன் என்ற உறுதியளிப்பையும் கருத்தில் கொண்டுள்ளோம் என தாய்லாந்து பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஆகவே, எந்தவோர் அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதற்கு கோட்டாவுக்கு அனுமதியளிக்கப்படாது, அவருக்கு தஞ்சம் புகுவதற்கு ஒரு நாட்டை தேடிக்கொள்ளும் வரையிலும் மனிதாபிமான உதவி இதுவென தாய்லாந்து பிரதமர் கூறியதாக பாங்கொக் போஸ்ட் செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது.

தாய்லாந்தின் கிராபி நகருக்கு தனது துணைவியாருடன் சென்றிருந்த கோட்டாபய, நேற்று (11) பாங்கொக் சென்றதாகவும் அங்கு அவர் 90 நாட்கள் தங்கியிருக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தாய்லாந்து வெளிவிவகார அமைச்சர் டொன் பிரமுத்வினை தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி இலங்கை அரசாங்கத்தால் அங்கிகரிக்கப்பட்ட இராஜதந்திர கடவுச்சீட்டை வைத்திருப்பதாகவும், அதற்கமைய தாய்லாந்தின் விதிமுறைகளின்படி 90 நாட்கள் வரை தாய்லாந்தில் தங்க முடியும் எனவும் அவர் அறிவித்துள்ளார். தாய்லாந்தில் இலங்கையர்கள் வாழ்கின்ற காரணத்தினால், அதனை கருத்தில் கொண்டு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய, ஹோட்டல், வாடகை குடியிருப்பில் அல்லது வீட்டில் தங்க முடியும் எனவும், அதற்கான அனுமதியை தாய்லாந்து அரசாங்கம் வழங்கும் என்றார்.

ஒரு ஆதரிப்பாளர் நாடாக, தாய்லாந்திற்குள் நுழைவதற்கான முன்னாள் ஜனாதிபதியின் கோரிக்கையை தாய்லாந்து நிராகரிக்க முடியும், ஆனால் அவரது கோரிக்கையை கவனமாக பரிசீலித்த பின்னர், அவர் இங்கு தங்கியிருக்கும் போது எந்தவிதமான பிரச்சினைகளும் அவரால் ஏற்படாத வரை, அவர் 90 நாட்கள் வரை தாய்லாந்தில் தங்கலாம் என வெளியுறவு அமைச்சர் அறிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி கோட்டாவை, தாய்லாந்துக்குள் செல்ல அனுமதிக்குமாறு தாய்லாந்து அரசாங்கத்திடம் இலங்கை அரசாங்கம் கோரியுள்ளதாகவும், அத்தனையும் கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் எடுத்ததாகவும் தாய்லாந்து வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் டானி சங்கராத் தெரிவித்துள்ளார்.

## கர்தினாலுக்கு கொரோனா

ரொரோனா தொற்று காரணமாக விசேட நிகழ்ச்சிகள் மற்றும் கூட்டங்களில் பங்கேற்பதை பேராயர் கர்தினால் ரஞ்சித் ஒத்திவைத்துள்ளதாகவும், விசேட சந்திப்புகள் சில ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றையும் நிறுத்தியுள்ளதாக பேராயர் இல்லம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாகாண சபையின் செலவை நிர்வகியுங்கள்

.தற்போதைய சவாலான காலகட்டத்தில் பொதுச் செலவினங்களை நிர்வகிப்பதன் மூலம் பொதுச் சேவைகளை உகந்த மட்டத்தில் பராமரிப்பது மிகவும் முக்கியமானது என்று குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாகாணத்தின் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலும் மாகாணத்தின் அபிவிருத்தி முன்னுரிமைகளை இனங்கண்டு கொள்வதிலும் சகல பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் ஜனாதிபதி அலுவலகத்துடனும் ஆளுநர்கள் நல்ல ஒருங்கிணைப்பை பேண வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, 15 நாட்களுக்கு ஒரு முறையாவது தமது மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுமாறும் மாகாண சபையின் ஊடாக அமுல்படுத்தப்படும் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் வழமையான கலந்துரையாடலை மேற்கொள்ளுமாறும் ஆளுநர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கட்டான காலப்பகுதியில் தேசிய இலக்குகளை அடைவதற்கு ஆளுநர்களின் பங்களிப்பு தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க அவதானம் செலுத்தி வருவதாகவும் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 4ஆம் மாடிக்கு...

பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் மன்னார் பொலிஸ் ஊடாக குறித்த அழைப்புக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கொழும்பில் உள்ள பயங்கரவாத தடுப்புப் பிரிவு அலுவலகத்தில் விசாரணைக்கு சமூகமளிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, கடந்த பெப்பிரவரி மாதம் 18ஆம் திகதியும் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தார்.

இவ்வாறு தொடர்ந்து சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் விசாரணை என்கிற போர்வையில் அச்சுறுத்தும் செயற்பாட்டில் அரசு முன்னெடுத்து வருகின்றமை மற்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியான சூழ்நிலையில் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் விசாரணை என்கிற போர்வையில் அச்சுறுத்தும் செயற்பாட்டில் ஈடுபடுகின்றமை சமூக ரீதியில் விசனத்தை ஏற்படுத்தும் செயல்பாடாக உள்ளதாக சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## இன்றுடன் 2000...

கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முத்தலில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ள போராட்டம் பேரணியாக சென்று டிப்போ சந்தியில் நிறைவடையவுள்ளது. பேரணியின் முடிவில் கிளிநொச்சியில் உள்ள ஐக்கிய நாடுகள் தூதரகத்தில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்படும் என வடக்கு கிழக்கில் வலிந்து காணமால் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் வடக்கு கிழக்கில் உண்மை மற்றும் நீதிக்கான இடைவிடாத போராட்டத்தை ஆரம்பித்து 2000 நாட்கள் நிறைவடைகின்றன. விசாரணை ஆணைக்குழுக்கள் முதல் உள்நாட்டு வழிமுறைகளுடன் அவர்கள் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ளனர், ஆனால் எந்த பயனும் இல்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்னவானது என்ற பதில்கள் இன்னமும் வழங்கப்படவில்லை. இலங்கையில் சீரழிந்து வரும் மனித உரிமை குறித்த நிலைமையை சர்வதேச சமூகம் கடுமையாக கண்காணிக்க வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

## ஒருமனதாக நிறைவேற்றுவது பிரதிநிதிகளின் கடமையாகும்

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவிக்கான பல அதிகாரங்களை முன்னாள் ஜனாதிபதியின் ஆட்சிக்காலம் நீடிப்பதற்கு மேற்கொண்டிருந்த முயற்சிகளை தோல்வியடையச் செய்து. எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் அவற்றை இரத்துச் செய்வதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை ஜனநாயகத்தை போற்றும் அனைவரினதும் பாராட்டை பெரும் நடவடிக்கையாகும். இதுபோன்ற ஜனநாயக சீர்த்திருத்தங்களுக்காக முன்வந்த ஜனாதிபதிக்கும், நீதியமைச்சுக்கும் அரசாங்கத்துக்கும் சமூக நீதிக்கான தேசிய இயக்கம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது என அவ்வியக்கம் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அரசியலமைப்பின் 22ஆவது திருத்தம் தொடர்பில் செப்டெம்பர் மாதம் 6ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ள விவாதத்தில் இந்த நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்கள், மக்களுக்கான கடமையை ஆற்றுவார்கள் என்று எண்ணுகிறோம். அதேபோன்று மேற்படி திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படவேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஜனநாயகத்தை உறுதி செய்வதும், மக்களின் நலனுக்காக பணி செய்வதும், எதிர்கால சந்ததியினருக்கு மகிழ்ச்சியாக வாழக்கூடிய நாட்டை உருவாக்குவதும் எமது நாட்டின் மக்கள் பிரதிநதிகளின் கடமையாகும். அந்த கடமைகளை ஆற்றுவதற்கு அரசியல் மற்றும் பொருளாதார சீர்த்திருத்தங்களின் மீது நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. முந்தைய அரசாங்கம் 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றிய நாள் முதல், அதனை அகற்றுவதற்கான போராட்டத்தில் நாம் ஈடுபட்டிருந்தோம். அதேபோன்றும் நாட்டின் நலனுக்காக முன்னெடுக்கப்படவேண்டிய அரசியல், பொருளாதார, சமூக சீர்த்திருத்தங்களுக்காகவும் நாம் முழுமையாக எமது கடமையைச் செய்வோம் என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனநாயகத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அறவழிப் போராட்டத்தின் செயற்பாட்டாளர்களையும் தொழிற்சங்க தலைவர்களையும் துன்புறுத்துவதை நாம் அங்கிகரிப்பதில்லை. அந்த விடயம் தொடர்பில் நாம் மிகவும் வருத்தம் அடைகின்றோம். அதேபோன்று கடத்தல் சம்பவங்கள் தொடர்பில் வெளிவரும் தகவல்கள் எம்மை வருத்தத்தில் ஆழ்த்துகின்றன. இவ்வாறான சம்பவங்கள் தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் பல பாதகங்கள் நாட்டுக்கு ஏற்படலாம் என்பதால், இதுபோன்ற விடயங்களில் ஜனாதிபதி, தனது மேலான கவனத்தை செலுத்தவேண்டுமென எதிர்பார்ப்பதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

## உள்ளக மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்

சங்கத்தின் கல்முனை தலைமையகத்தில் நேற்று (11) ஊடகவியலாளர் சந்திப்பு மேற்கொண்டு, மேற்படி சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் இதனைத் தெரிவித்தார்.

அவர் தனது கருத்தில் குறிப்பிட்டதாவது, “தமிழ் மக்கள் கூட தமிழ்த் தலைமைகளை ஏற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. காரணம், அநேகமாக மக்கள் பிரச்சினை தீர்க்கப்படாமை ஆகும்.

“எதிர்கட்சி தலைவராக கடந்த காலங்களில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இருந்து கொண்டு ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்கு ஆதரவாக செயற்பட்டவர்.

“எனவே தான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுக்கோப்பு இல்லாமல் போய் உள்ளது. இதற்கு காரணம் தலைமைத்துவம் தான். சரியான வழிநடத்தல் இன்மையினால் தான் இந்நிலை கூட்டமைப்புக்கு ஏற்பட்டுள்ளது.

“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழரசுக் கட்சிக்கு மாத்திரம் உரித்தானது என கடந்த கால செயற்பாடுகள் சென்று கொண்டிருக்கின்றன. ‘இனிவரும் காலங்களில் தமிழ் தேசிய கூட்டமைப்பில் ஒற்றுமையினை ஏற்படுத்துவது என்பது சிரமம்.

“ஆகவே தான், உலக தமிழ் மக்களும் தொழிற்சங்கங்களும் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்குவதை குறைத்து வருகின்றார்கள் என்பதே உண்மையாகும்.

“எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்ளக மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கி, கூட்டமைப்பை வழிநடத்த வேண்டும் என்றார்.

## ஒட்டோக்கள்...

அறிக்கை கிடைத்ததன் பின்னர் முழுநேரம் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளுக்கான எரிபொருள் கோட்டா அதிகரிக்கப்படும் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இதனிடையே எதிர்வரும் 13 ஆம் திகதி 40 ஆயிரம் மெற்றிக்தொன் மசகு எண்ணெய் கப்பல் நாட்டை வந்தடையவுள்ளது. அதற்கமைய எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகளை மீள ஆரம்பிக்கவுள்ளதாக எரிசக்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது

## உணவுப் பொருட்களின்...

குளிர்சாதனப் பெட்டிகளில் வைக்கப்படும் யோகட், ஐஸ்கிறீம், குளிரூட்டப்பட்ட பானங்கள் மற்றும் கோழி இறைச்சி உள்ளிட்ட இன்னும் பல உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கவேண்டிய நிலைமை, இந்த மின் கட்டண அதிகரிப்பால் ஏற்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பருப்பு, சீனி உள்ளிட்ட இன்னும் பல அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அவை குறைக்கப்படவில்லை. ஆகையால், உணவகங்களில் விலைகள் குறைக்கப்படவேண்டுமாயின், விலை குறைப்பு, நுகர்வோரை முழுமையாகச் சென்றடைய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.



## யுவான்...

எனினும், இலங்கையில் இருந்து 650 கடல் மைல் தொலைவில் ‘யுவான் வாங் 5’ கப்பல் மெதுவாக இலங்கையை நோக்கி நகர்ந்துகொண்டுள்ளதாக தொடர்ச்சியாக இந்திய செய்தி நிறுவனங்கள் தகவல்களை வெளியிட்டு வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## செயலணியின் அறிக்கையை நடைமுறைப்படுத்த வேண்டாம்

முன்னாள் ஜனாதிபதியினால் ‘ஒரே நாடு, ஒரே சட்டம்’ என்ற செயலணி உருவாக்கப்பட்டது. எந்த வகையிலும் தகுதியற்ற ஒருவரை தலைவராகக் கொண்டு, அவருக்கு விருப்பமான முறையில் அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு, முன்னாள் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த ஆவணத்தை எந்த வகையிலும் நடைமுறைப்படுத்த வேண்டாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்தோம். அவர் அதற்கு உடன்பட்டார் என்றும் ரிஷாட் தெரிவித்துள்ளார்.

அது மாத்திரமின்றி, இந்த நாட்டில் பொருளாதாரம் சீரழிந்தமைக்கு இனவாத, மதவாத சக்திகளின் கைகள் ஓங்கியமையே பிரதான காரணம். இந்த அரசாங்கத்துக்கு முன்னர் ஆட்சியிலிருந்த ஜனாதிபதியின் தலைமையிலான அரசாங்கம் , இனவாதத்தையும் மதவாதத்தையும் மூலதனமாகக் கொண்டே ஆட்சியை அமைத்தது. இனவாதத்தை பரப்புவதன் மூலமே தமது அரசியல் இருப்பை நிலைப்படுத்தலாம் எனவும் எண்ணி, இனவாத சக்திகளை தொடர்ச்சியாக வளரவிட்டது. அதனால்தான், இந்த நாடு குட்டிச்சுவராகி, ‘கியூ’ யுகத்துக்கு தள்ளப்பட்டிருக்கிறது. எனவே, இந்த நாட்டை கட்டியெழுப்புவதாக இருந்தால், இனவாத, மதவாத சக்திகளின் கைகள் ஓங்கவிடாமல் தடுக்க வேண்டும். பாதுகாக்க வேண்டும் என்பதை நாம் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினோம் என ரிஷாட் தெரிவித்துள்ளார்.

45,000 அவுஸ்திரேலிய டொலரை

# ஆஸி.கிரிக்கெட் அணி வழங்குகிறது

இலங்கைக்கு கடந்த மாதம் சுற்றுப் பயணம் மேற்கொண்ட அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி, தனக்கு கிடைத்த வெற்றிப் பணத்தில் 45,000 அவுஸ்திரேலிய டொலரை இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு நிதியுதவியாக வழங்கியுள்ளனர்.

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, அதன் மூலம் பெற்ற வெற்றிப் பணத்தில் 45,000 அவுஸ்திரேலிய டொலரை அவர்கள் நிதியுதவியாக வழங்கியுள்ளதாக ஆஸி. அணியின் தலைவர் பின்ச் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையில் உள்ள குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக யுனிசெஃப் மூலம் குறித்த தொகையை வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஐ.எம்.எப் பேச்சுவார்த்தைகளின் பின்னர்

## ஜெய்க்கா வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும்



ஜப்பான், ஜெய்க்கா நிறுவனத்தின் வேலைத்திட்டங்கள் இலங்கையில் தற்காலிகமாகவே நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை முடிவடைந்ததும் அந்தத் திட்டங்கள் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

நாட்டில் நிலவிய எரிபொருள், சமையல் எரிவாயு, உரம் போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டு வருகிறது. அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டு வாழ்க்கைச் செலவு குறைக்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எவ்வாறெனினும் கடந்த வருடம் முதல் எமது ஏற்றுமதி வருமானம் அதிகரித்து வருகிறது. இத்தகைய சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியின் கால்களை வாருவதை விடுத்து, அரசாங்கத்தை பலப்படுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றார்.

12 திட்டங்கள் இவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சு வார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவு பெற்றதும் அந்தத் திட்டங்கள் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும் என்றார்.

எம்.வி எக்ஸ்பிரஸ் பேர்ள் விவகாரம்:

## இழப்பீடு பெற்றுக்கொள்ள நடவடிக்கை



எம்.வி எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தால் ஏற்பட்ட சேதங்களுக்கு சட்ட நடவடிக்கை மற்றும் இழப்பீடு பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்குமாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு பணித்துள்ளார். இது தொடர்பில், இதுவரையில் எடுக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள், இழப்பீடுகள் தொடர்பில் தாமதமின்றி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நீதியமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார். இச்சம்பவம், பொது மக்கள் மற்றும் பல்வேறு தரப்பினரின் கவனத்தை ஈர்த்துள்ளதால், இதனை கண்காணித்து வருவதாகவும் அவர் கூறினார்.

# தேயிலை ஏற்றுமதி பாரியளவில் வீழ்ச்சி

பெருந்தோட்ட தேயிலை ஏற்றுமதி, கடந்த காலங்களுடன் ஒப்பிட்டு பார்க்கையில், பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. இதனை சீர்செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். நாட்டுக்கு பெருமை சேர்த்துவந்த 'சிலோன் டீ' ஏற்றுமதி, 1999ஆம் ஆண்டுக்கு பின்னர் இந்த வருடம் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது என எதிர்க்கட்சி உறுப்பினர் எம்.உதயகுமார் தெரிவித்தார்.

மக்களால் தாங்கிக்கொள்ள முடியாதளவிற்கு அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், அரசாங்கம் தற்போது மின் கட்டணத்தையும் அதிகரித்திருக்கின்றது. மக்களின் நிலைமையை உணர்ந்து மின்கட்டண அதிகரிப்பை அரசாங்கம் வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும். தற்போது வெறும் கண்துடைப்புக்காக அரசாங்கம் சில பொருட்களின் விலையை குறைத்திருக்கின்றது. இது மக்களை ஏமாற்றும் செயலாகும்.

நாட்டில் டொலர் இல்லாத பிரச்சினை இருந்து வருகின்றது. ஆனால், நாட்டுக்கு டொலரை பெற்றுக்கொள்ள தேசிய வேலைத்திட்டம் இதுவரை அமைக்கப்படவில்லை. நாட்டுக்கு அதிகமாக டொலரை பெற்றுத்தரும் ஏற்றுமதிகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பெருந்தோட்ட தேயிலை ஏற்றுமதி கடந்த காலங்களுடன் ஒப்பிட்டு பார்க்கையில், பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. இதனை சீர்செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். குறிப்பாக, 2021ஆம் ஆண்டு 3மாதங்களில் 69.8 மில்லியன் கிலோ கிராம் தேயிலை ஏற்றுமதி செய்திருந்த நிலையில் அது 2022 முதல் காலாண்டில் 63.7 மில்லியன் கிலோ கிராமாக குறைவடைந்துள்ளது. இந்த வீழ்ச்சியானது, 1999 முதல் காலாண்டுக்கு பிறகு ஏற்றுமதியில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சியாகும் எனத் தெரிவித்துள்ளார்.

## ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மீது நான்கு நாள் விவாதம்




பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அடுத்த நான்கு மாதச் செலவுகளுக்கான திருத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் மீதான விவாதத்தை இம்மாதம் 30, 31 மற்றும் செப்டெம்பர் 1ஆம், 2ஆம் திகதிகளில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டிற்கான அரசாங்கத்தின் செலவீனம் 479.43 பில்லியன் ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு நவம்பரில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2022 ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின்படி, அரசாங்கத்தின் செலவு ரூ.2,796.44 பில்லியனாக நிர்ணயிக்கப்பட்டது. எனினும், கடந்த புதன்கிழமை முன்வைக்கப்பட்ட திருத்தப்பட்ட சட்டமூலத்தின் ஊடாக அரசாங்கத்தின் செலவீனம் 3,275.8 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

100 நாள்கள் செயல்முனைவு:

## மூதூரில் 11ஆம் நாள் போராட்டம்




■ தீஷான் அஹமட்


"வடக்கு, கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்" எனும் 100 நாட்கள் செயல்முனைவின் 11ஆம் நாள் கவனயீர்ப்பு போராட்டம், மூதூர் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று (11) இடம்பெற்றது.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு இதனை ஏற்பாடு செய்திருந்தது.

இந்தப் போராட்டத்தில் மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள், சிவில் அமைப்பினர், பெண்கள் அமைப்பினர், கிராமிய பெண்கள் குழுக்கள், மனித உரிமை செயற்பாட்டாளர், இளைஞர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

'வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு அரசியல் தீர்வு வேண்டும்', 'நடமாடும் சுதந்திரம் எங்கள் உரிமை', 'கருத்துச் சுதந்திரம் எங்கள் உரிமை', 'மதத்தை பின்பற்றுவது எங்கள் உரிமை' உள்ளிட்ட பல பதாகைகளை போராட்டத்தில் கலந்துகொண்டோர் ஏந்தியிருந்தனர்.

# கிருஷ்ணரை தாலாட்ட வாய்ப்பு



குழந்தை கிருஷ்ணரை தொட்டிலிலிட்டு தாலாட்டும் வாய்ப்பு, ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ணர் ஆலய ஸ்ரீகிருஷ்ண ஜன்மாஷ்டமி விழாவில் பக்தர்களுக்குக் கிடைக்கவிருக்கிறது.

சர்வதேச கிருஷ்ண பக்தி கழகத்தின் இலங்கை கிளையால், கொட்டாஞ்சேனையில் நடத்தப்பட்டுவரும் ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ணர் ஆலயத்தில் இம்மாதம் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகவான் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா அவதரித்த நன்னாள் ஸ்ரீகிருஷ்ண ஜன்மாஷ்டமி விழா வெகு விமர்சையாகக் கொண்டாடப்படும்.

அன்றைய தினம், அதிகாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை விஷேட ஆராதனைகள் நடைபெறும். காலை 6 மணிக்கு மங்கள ஆரத்தியைத் தொடர்ந்து துளசி ஆரத்தி, தர்சன ஆரத்தி, குரு பூஜை நடைபெற்று குழந்தை கிருஷ்ணருக்கு வலம்புரி சங்கால் பால் அபிஷேகமும் ஆராதனையும் செய்யப்படும்.

அதனைத்தொடர்ந்து குழந்தை கிருஷ்ணரை தொட்டிலிலிட்டு பக்தர்கள் தாலாட்டும் வைபவம் இடம்பெறும்.

பிற்பகல் 12.30 மணிக்கு ராஜபோக ஆரத்தியும் மாலை தூப ஆரத்தி, துளசி ஆரத்தி, சந்திய ஆரத்தி நடைபெற்று குழந்தை கிருஷ்ணரை தொட்டிலிலிட்டு, பக்தர்கள் தாலாட்டும் வைபவம் இடம்பெறும்.

இரவு 8 மணிக்கு ஸ்ரீஸ்ரீ ராதா ராதாகிருஷ்ணருக்கு மகா அபிஷேகமும் அதைத் தொடர்ந்து விசேட ஆராதனை நடைபெற்ற பின்னர் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்படும். பக்தர்கள் அபிஷேகத்திற்கு வேண்டிய பால், இளநீர், பழம், பூக்கள் மற்றும் தேவையான பொருட்களையும் கொண்டு வந்து கொடுக்கலாம்.







## தீர்த்தோற்சவம்...

கிழக்கில் மிகவும் பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு, களுதாவளை, திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீ முருகன் கோவிலின் வருடாந்த தீர்த்தோற்சவம், வியாழக்கிழமை (11) காலை கோவில் முற்றலில் அமைந்துள்ள தீர்த்தக்குளத்தில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. கடந்த இரண்டாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய திருவிழா, தொடர்ந்து 10 நாள்கள் இடம்பெற்றன. புதன்கிழமை (10) இரவு திருவேட்டைத்திருவிழா இடம்பெற்றத்தைத் தொடர்ந்து, வியாழக்கிழமை காலை மூல மூர்த்தியாகிய முருகப்பெருமான் வள்ளி, தெய்வானை சமேதரராய் மயில் வாகனத்திலும் பிள்ளையார் மூசுக வாகனத்திலும், சிவன் உடனுறை பார்வதி சமேதரர் இடபவாகனத்திலும், உள்வீதி, வெளிவீதி வலம் வந்து, சுபமுகுர்த்த வேளையில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ, தீர்த்தோற்சவம் நடைபெற்றது.

(படங்கள்: வ. சக்திவேல்)







## வழிபாடுகள்...

போயா தினமான நேற்று (11), நாட்டிலுள்ள கோவில்கள், விகாரைகளில் சிறப்பு பூஜைகளும் வழிபாடுகளும் இடம்பெற்றன. களனி விகாரையில் இடம்பெற்ற வழிபாடுகளின் போது பிடிக்கப்பட்ட படங்கள் இவை.

(படங்கள்: பிரதீப் பத்திரண)

# ஜனாதிபதியை சந்தித்த மு.கா





■ நூருல் ஹுதா உமர்

முஸ்லிங்களின் காணிப் பிரச்சினைகள் தொடக்கம் பல்வேறு முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பில் கலந்துரையாடியதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பிலான திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் குழுவினருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நேற்று முன்தினம் (10) இடம்பெற்ற சந்திப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், இந்தச் சந்திப்பின் போது சர்வகட்சி அரசாங்கம் அமைப்பது தொடர்பிலும், பாராளுமன்ற விடயங்கள் தொடர்பிலும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் குழுவினருடன் ஜனாதிபதி ஆழமாக கலந்துரையாடியிருந்தார்.

மேலும், பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் நிகழ்த்திய அக்கிராசன உரையை பாராட்டிய ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் குழுவினர், ஜனாதிபதியிடம் முஸ்லிங்கள் சார்பில் பல அம்ச கோரிக்கைகளை முன்வைத்தனர்.

அதில் சம்மாந்துறை, மூதூர் போன்ற உள்ளூராட்சி மன்றங்களின் தரமுயர்த்தல் உட்பட ஏனைய சில உள்ளூராட்சி மன்றங்களில் உள்ள நிர்வாக முரண்பாடுகளை தீர்த்தல், கிழக்கு மாகாண பிரதேச செயலகங்களில் உள்ள நிர்வாக முரண்பாடுகளுக்கு தீர்வை காணுதல், விவசாயிகளின் விவசாய நடவடிக்கைகளுக்கும், மீனவர்களின் மீன்பிடிக்குமான எரிபொருளை தங்குதடையின்றி பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தல், முஸ்லிங்களின் காணிப் பிரச்சினைகள் உட்பட முஸ்லிங்களின் முக்கிய பல பிரச்சினைகள் தொடர்பில் தீர்வுகளை நாடி கோரிக்கைகளை முன்வைத்து வலியுறுத்தப்பட்டதாக தெரிவித்தார்.

மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர்

# பதவியை ஒருபோதும் ஏற்க மாட்டோம்

## சிறிதரன் எம்.பி தெரிவிப்பு



■ என்ராஜ்

மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் பதவியை கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒருபோதும் ஏற்க மாட்டோம் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ் மக்கள் தங்களுடைய அன்றாட பிரச்சினைகளாக பல விடயங்களை சந்தித்து கொண்டிருக்கின்றார்கள். அது தொடர்பில் நாங்கள் டலஸ் அழகபெருமவுக்கு எழுதிக் கொடுத்த விடயங்களையே, தற்போதைய ஜனாதிபதியை சந்தித்தபோதும் அவருக்கு கூறி இருக்கின்றோம்

"தமிழ் மக்கள் அன்றாடம் சந்தித்து வருகிற முக்கியமான பிரச்சினைகளான அரசியல் கைதிகளுடைய விடுதலை முதற்கட்டமாக ஒரு சிறு தொகையினரை யாவது விடுதலை செய்ய வேண்டும்.

"அத்தோடு, காணி விடயங்களில் அதிக அக்கறை இந்த அரசாங்க செலுத்த வேண்டும். கடந்த ஆட்சியின் போது அபிவிருத்திக் குழு இணைத் தலைவர்களாக பலரை இணைத்து, அதில் ஒரு முடிவெடுக்கக்கூடிய நிலை இருக்கவில்லை.

"இன்று வடக்கு ஆளுநருடைய செயற்பாடு மிகவும் பாரதூரமாக காணப்படுகின்றது. ஒரு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் எடுத்த தீர்மானத்தை நிராகரித்து, வடக்கு ஆளுநர் அலுவலகத்தால் கடிதம் அனுப்பும் அளவுக்கு நிலைமை காணப்படுகின்றது.

"மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் அதிகாரம் என்ன, ஏன் இந்த மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கள் இருக்க வேண்டும்? இது ஒரு கண் துடைப்புக்கு மக்களை ஏமாற்றுவதற்காக வேண்டி, அரசாங்கத்தால் கொடுக்கப்படுகின்ற பதவிகளாகும்.

"இலங்கையினுடைய பொருளாதாரம் அதல பாதாளத்துக்கு சென்றுள்ளது. பொருளாதாரத்தை மீட்பது அல்லது பொருளாதார நடவடிக்கைகளை கட்டி அமைப்பதிலே எங்களுடைய பங்கு இருக்கும்.

"ஆனால், அபிவிருத்திக் குழுத் தலைவர் பதவிகளை ஏற்பதை நாங்கள் தவிர்த்துக் கொள்ள விரும்புகின்றோம். இந்த விடயங்கள் தொடர்பில் விரைவில் அனைவருடனும் பேசி ஒரு தீர்வை எடுப்போம்" என்றார்.

கிண்ணியாவில்

# ஹெரோய்னுடன் குடும்பஸ்தர் கைது

■ ஒலுமுதீன் கியாஸ் ஷாபி

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிண்ணியா - மட்டக்களப்பு வீதி, ரீ சந்தியில் வைத்து ஹெரோய்ன் போதைப்பொருள் வைத்திருந்த குடும்பஸ்தர், திருகோணமலை பிராந்திய போதை பொருள் தடுப்பு பிரிவால் நேற்று முன்தினம் (10) கைது செய்யப்பட்டு, கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கைதான நபரிடமிருந்து 5.6 கிராம் ஹெரோய்ன் பொதி கைப்பற்றப்பட்டதாக போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

கிண்ணியா, பூவரசந்தீவை பிறப்பிடமாகவும் கிண்ணியா - மாஞ்சோலைசேனை பிரதேசத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குடும்பஸ்தரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபருக்கு போதைப்பொருள் பாவிக்கும் பழக்கம் இருப்பதோடு, இவர் நீண்ட காலமாக போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருபவர் என விசாரணையின் போது தெரியவந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.







**தீமிதிப்பு...**

ஏறாவூர் 04 காட்டுமாஞ்சோலை ஸ்ரீ வடபத்திரகாளி கோவில் வருடாந்த திருச்சடங்கு, 31.07.2022 அன்று திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி, நேற்று (11) தீமிதிப்பு வைபவத்துடன் பெருவிழா நிறைவடைந்தது. (படங்கள்: ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

மாட்டை காப்பாற்ற முயற்சித்து

# விபத்தில் சிக்கிய ஓட்டோ ஓட்டுநர்

■ எஸ் தில்லைநாதன்



வடமராட்சி, மாலைசந்தை தனியார் கல்வி நிலையத்துக்கு முன் வீதியின் குறுக்காக சென்ற மாட்டை காப்பாற்ற முயற்சித்த போது, ஓட்டோ விபத்துக்குள்ளாகி உள்ளது.

குறித்த விபத்தில் படுகாயமடைந்த கரணவாய், கரவெட்டி பகுதியைச் சேர்ந்த மாம்பழம் மகேந்திரன் (வயது 50) என்ற ஓட்டோ ஓட்டுநர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுகவீனத்தால் பாதிக்கப்பட்ட ஒருவரை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் (10) இரவு அனுமதித்த பின்னர், வீடு திரும்பிய போது, மாடு ஒன்று வீதியின் குறுக்கே வந்துள்ளது.

குறித்த மாட்டை காப்பாற்ற முயற்சித்த போது, வேகக் கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ, வீதி வாய்க்காலுக்கு மேலாக பாய்ந்து தனியார் கல்வி நிலையத்துக்குள் புகுந்துள்ளது.

விபத்து தொடர்பாக நெல்லியடி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



மோட்டார்சைக்கிள் தீப்பற்றியமையால்

# மாட்டிக்கொண்ட திருடன்

■ செ.கீதாஞ்சன்

விசுவமடு, வள்ளுவர் புரம் கிராமத்தில் உள்ள வீடுகளுக்குள் புகுந்து பல்வேறு கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டு வந்த ஒருவர், பெற்றோல் திருடும் போது வசமாக சிக்கியுள்ளார்.

குறித்த நபர், வள்ளுவர் புரம் கிராமத்தில் வீடுகளில் புகுந்து தண்ணீர் இறைக்கும் மோட்டர்கள், தென்னை மரங்களில் ஏறி தேங்காய்கள் பறித்தல், வழிப்பறி உள்ளிட்ட கொள்ளைகளில் ஈடுபட்டு வந்துள்ள நிலையில், அண்மைய நாள்களாக வீடுகளில் இருக்கும் மோட்டார் சைக்கிள்களில் பெற்றோல் திருடியும் வந்ததாக கூறப்படுகின்றது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் (10) வீடு ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களில் பெற்றோலைத் திருட முற்பட்ட போது மோட்டார் சைக்கிள் தீப்பற்றிக் கொண்டது.

இதையடுத்து, வீட்டிலுள்ளவர்கள் அயலவர்களின் உதவியுடன் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதுடன், திருடன் அருகில் உள்ள பற்றைக்காட்டில் மறைந்திருந்த வேளை, இளைஞர்கள் ஒன்று திரண்டு திருடனை பிடித்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

தொடர்ந்து புதுக்குடியிருப்பு பொலிஸார் திருடனை கைது செய்துள்ளதுடன், எரிந்து சேதமான மோட்டார் சைக்கிளையும் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட திருடனிடம் விசாரணைகள் மேற்கொண்டு சட்டத்தின் முன் நிறுத்தும் நடவடிக்கையில் புதுக்குடியிருப்பு பொலிஸார் ஈடுபட்டுள்ளார்கள்.

# மட்டு. சிறைச்சாலைக்கு மட்டு. அத்தியட்சகர்

■ ரீ.எல்.ஜவ்பர்கான்



மட்டக்களப்பு சிறைச்சாலை வரலாற்றில் மட்டக்களப்பைச் சேர்ந்த ஒருவர் சிறைச்சாலை அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இன்று (12) முதல் அமுலுக்கு வரும் வகையில், இலங்கை சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் அத்தியட்சகராக கடமையாற்றிய எஸ்.எல். விஜயசேகர இடமாற்றம் பெற்றுச் சென்றதன் பின்னர், புதிய சிறைச்சாலை அத்தியட்சகராக நல்லையா பிரகரன் நியமிக்கப்பட்டுள்ளார்

2017ஆம் ஆண்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் பிரதம ஜெயிலராக கடமையாற்றிய இவர், அதே ஆண்டில் சுப்றா கிரோட்டில் சித்தியடைந்து பதவியுயர்வு பெற்று, 2018 மற்றும் 2019ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் யாழ்ப்பாண சிறைச்சாலையில் பிரதம ஜெயிலராக கடமையாற்றியுள்ளார்.

அதன்பின்னர் சிரேஷ்ட தரத்தைச் சேர்ந்த இவர் 2020 ஆண்டு இலங்கையில் பெரிய சிறைச்சாலையான தும்பறை மற்றும் போகம்பர ஆகிய சிறைச்சாலைகளில் உதவி அத்தியட்சகராக கடமையாற்றிய பின்னர் 2021இல் வவுனியா சிறைச்சாலையில் உதவி அத்தியட்சகராக கடமையாற்றிவந்த நிலையில் மட்டக்களப்பு சிறைச்சாலையின் புதிய அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# சிறுபோக நெல் அறுவடை துரிதம்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2022 சிறுபோக நெற்செய்கை பண்ணப்பட்ட நெல் வயல்கள் தற்பொழுது துரிதமாக அறுவடை செய்யப்பட்டு வருகின்றன.

இம் மாவட்டத்தில் உள்ள 16 கமநல சேவை கேந்திர நிலையை பிரிவுகளில் சுமார் 32,260 ஹெக்டேரில் நெற் செய்கை பண்ணப்பட்டதாக கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிரதி ஆணையாளர் கே.ஜெகன்நாத் தெரிவித்தார்.

அறுவடைக் காலம் தொடங்கியுள்ள போதிலும் அறுவடைக்குத் தேவையான எரிபொருளை அரசாங்கம் பெற்றுக் கொடுத்ததனால், குறித்த வேளைக்கு தமது நெல்லை அறுவடை செய்வதற்கு வசதி கிட்டியதாக இப்பிரதேச விவசாயிகள் தெரிவிக்கின்றனர். அதேவேளை, எதிர்வரும், பெரும்போக நெல் செய்கையின் போது தேவையான யூரியா உட்பட சகல வசதிகளையும் பெற்றுத் தருவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.


# தமிழக மீனவர்கள் ஒன்பது பேர் கைது

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு கடற்பரப்பில் தொடர்ச்சியாக இந்திய இழுவைப்படகுகள் அத்துமீறும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக அண்மைய நாள்களில் மீனவர்கள் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளதுடன், இந்திய இழுவைப்படகுகளை கரையில் இருந்து காணக்கூடியதாகவும் உள்ளது.

இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் செயற்பாடு தொடர்பில் கடற்படையினர், பொலிஸார், கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தினர் உள்ளிட்ட அரச அதிகாரிகளுக்கும் முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர்கள் தெரியப்படுத்தியுள்ளார்கள்.

இந்நிலையில், இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறிய கடற்தொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட இந்திய இழுவைப்படகு ஒன்றையும் அதில் இருந்த 9 கடற்தொழிலாளர்களையும் கடற்படையினர் கைது செய்துள்ளார்கள்.



இவர்கள், திருகோணமலை துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடற்படை அறிவித்துள்ளது.

# முஸம்மில் மொஹிதீனை கிழக்கு ஆளுநராக்கவும்

## ஜனாதிபதியிடம் கோரிக்கை

■ எம்.முபாரக்

ஐக்கிய தேசிய கட்சியின் பங்காளிக் கட்சியான தேசிய விடுதலை மக்கள் முன்னணி கட்சியின் தலைவர் முஸம்மில் மொஹிதீனை, கிழக்கு மாகாண ஆளுனராக நியமிக்குமாறு, கிழக்கிலுள்ள சில சிவில் அமைப்புகள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

கிழக்கு மாகாணத்தில் ஆளுநராக தமிழ் பேசுகின்ற ஒருவரே நியமிக்கப்பட வேண்டுமெனவும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவராக அவர் இருக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனவே, தேசிய விடுதலை மக்கள் முன்னணியின் தலைவர், இன, மத பேதமற்ற ஒருவராக உள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், முஸம்மில் மொஹிதீன், கடந்த பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் ஐ.தே.கட்சி சார்பாக போட்டியிட்டதோடு, கிழக்கு மாகாணத்துக்கு பொருத்தமான நபராக தாம் இவரை நோக்குவதாகவும் குறித்த சிவில் அமைப்புகள் இணைந்து ஜனாதிபதியிடம் இக்கோரிக்கையை முன்வைத்துள்ளன.



மாலை வேளையுடன்

# எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பூட்டு

## கறுப்பு சந்தையால் யாழில் ஏற்பட்ட நிலை

■ எம்.றொசாந்த்

யாழில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இரவு வேளைகளில் குழப்பங்கள், விரும்பத்தகாத செயல்கள் நடைபெறுவதால் மாலை வேளையுடன் பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்படுவதாக, யாழ். மாவட்டச் செயலாளர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழில் இயங்கும் பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மாலை வேளையுடன் மூடப்படுகின்றன. அது தொடர்பில் கேட்ட போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கடந்த வாரம் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு இருந்தேன்.

"அதன்போது எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மாலை வேளைகளில் மது போதையில் கூடுபவர்கள், கறுப்பு சந்தை வியாபாரிகள், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குழப்பங்களை ஏற்படுத்துவதுடன், விரும்பத்தகாத செயல்களிலும் ஈடுபடுகின்றனர்.

"இதனால் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களின் பாதுகாப்பு கேள்விக்கு உள்ளாகிறது. ஆகவே, தாம் மாலை வேளையுடன் எரிபொருள் நிரப்பு நிலையங்களை மூடுவதாக உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

"எனவே, எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர், அப்பகுதி பிரதேச செயலாளர் ஆகியோரின் முடிவின் பிரகாரம் மாலையுடன் மூடுவதா இல்லையா என முடிவெடுக்கப்படும்" என்றார்.

லுணுகலையில் காணாமல் போன சிறுமி

# குகையிலிருந்து மீட்கப்பட்டார்

## ஆண்கள் இருவரும் பிடிபட்டனர்

■ ராமு தனராஜா



லுணுகலை 27ஆம் கட்டை பகுதியிலிருந்து ஒகஸ்ட் 3ஆம் திகதி காணாமல் போன 14 வயது சிறுமி காட்டுப்பகுதியில் உள்ள குகையிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், இச்சிறுமியுடன் இளைஞர் ஒருவரும் 58 வயது நபர் ஒருவரும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

லுணுகலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்த நிலையில், பல்லேகிருவ பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞர் ஒருவரும் 58 வயதுடைய லுணுகலைப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரும் குறித்த சிறுமியும் உடகிருவ- கொட்டிகல்கே காட்டுப் பகுதியில் தலைமறைவாகி இருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. அதற்கமைய, நேற்று (11) காலை விசேட அதிரடி படையினர் மற்றும் லுணுகலை பொலிஸார் இணைந்து உடகிருவ காட்டுப்பகுதியில் தேடுதலை மேற்கொண்ட போது, குறித்த மூவரும் கற்குகை ஒன்றினுள் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

# ஐந்து வயது சிறுமி மாயம்

■ சுமணசிறி குணதிலக



வெல்லவாய- பள்ளிவாசலுக்கு பின்புறமாக பெற்றோருடன் வசித்து வந்த சிறுமியாருவர் நேற்றுமுன்தினம் (10) முதல் காணாமல் போயுள்ளார்.


செத்மி அன்சிகா என்ற 5 வயது சிறுமியே இவ்வாறு காணாமல் போயுள்ளார் என வெல்லவாய பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுமியின் வீட்டுக்கு கூலி வேலை செய்வதற்காக நபர் ஒருவர் வந்து செல்வதாகவும் நேற்று முன்தினம் (10) பகல் இரண்டு மணியளவில் வீட்டுக்கு வந்துள்ள குறித்த நபர், சிறுமிக்கு யோகட் வாங்கிக்கொடுப்பதாக கூறி நகருக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

எனினும், மாலை 6 மணியாகியும் சிறுமி வீட்டுக்கு வரவில்லை என தெரிவித்து, சிறுமியின் தாய் வெல்லவாய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து சிறுமியை தேடும் நடவடிக்கையில் வெல்லவாய பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

# கொண்ட கிளி மீட்பு



■ இந்திக அருணகுமார

மாத்தளை, கலுதாவளை பிரதேசத்தில் வீடொன்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த பாதுகாக்கப்பட வேண்டிய பறவைகளில் ஒன்றான (plum heeded parakeet ) என்ற வகையைச் சேர்ந்த கிளியை, வனஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகள் மீட்டெடுத்துள்ளனர்.

கிடைத்த தகவலுக்கு அமைய, கடந்த 9ஆம் திகதி, அவ்வீட்டை சுற்றிவளைத்த அதிகாரிகள், கிளியை மறைத்து வைத்திருந்தவரையும் கைது செய்துள்ளனர். அவரை மாத்தளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மாத்தளை மாட்டத்தைப் பொறுத்தவரையில் இவ்வாறான கிளியை முதல் தடவையாக மீட்டெடுத்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மின் கட்டண உயர்வு மலையக மக்களுக்கு

## மற்றொரு தலையிடியாக மாறியுள்ளது

■ நிலமேகம் பிரசாந்த்



நாட்டில் தற்போது மின்கட்டணம் அதிகரித்துள்ளமை மலையக மக்களுக்கு பாரிய தலையிடியாக அமைந்துள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் அமைப்பு செயலாளர் லெட்சுமனார் சஞ்சய் குறிப்பிட்டுள்ளார்.


நுவரெலியாவில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர்,

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளமை உண்மைதான். அதேபோல பணவீக்கமும் அதிகரித்துள்ளது. ஆனால், மறுபக்கம் தேயிலையின் விலையும் அதிகரித்துள்ளது. விலை அதிகரிக்கப்பட்டாலும் மலையக மக்களின் வருமானத்திலும் அவர்களின் முன்னேற்றத்திலும் எவ்விதமான மாற்றங்களும் இன்றி அப்படியேதான் இருக்கின்றன.

அத்தியாவசிய உணவுப் பொருட்களை கொள்வனவு செய்யவே மிக கஸ்டப்பட்டு கொண்டிருக்கும் இவ்வேளையில், மின்கட்டணத்தை உயர்த்தியமை பாரிய தலையிடியை மலையக மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது என்றார்.

# கண்டியில் துப்பாக்கி ரவைகள் மீட்பு

■ சேஹ்ன் செனவிரத்ன



பேராதனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கண்ணொருவ பாலத்துக்கு அருகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 35 துப்பாக்கி ரவைகளும் வெற்று துப்பாக்கி ஒன்றும் இராணுவப் புலனாய்வு பிரிவினரால் கண்டுபிடிக்கபட்டு, பேராதனைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமையவே இந்தத் துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மீட்கப்பட்ட ரவைகளுள் எம். 16 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தக் கூடிய 18 ரவைகளும் டி.56 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தக் கூடிய 7 ரவைகளும் எஸ். எல்.ஆர் துப்பாக்கிக்கு பயன்படுத்தக் கூடிய 5 ரவைகளும் எப்.என். ரைபிளுக்கு பயன்படுத்தக் கூடிய 3 ரவைகளும் அடங்குகின்றன என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பேராதனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

28,838 பாதயாத்திரிகர்களால்

## 5 தொன் கழிவுகள் சுற்றாடலில் வீசப்பட்டுள்ளன



■ அஜித்லால் சாந்தஉதய

குமண தேசிய வனத்தின் பிரதான நுழைவாயிலிருந்து சிறிய கெபிலித்த தேவாலயம் வரையான 18 கிலோ மீற்றர் தூரத்தின் இரு புறங்களும் உக்காத பொலித்தீன், பிளாஸ்டிக் உள்ளிட்ட 5 தொன் கழிவுகள் அப்புறப்படுத்தப்பட்டதென குமண தேசிய வனத்தின் பொறுப்பாளர் ஆர்.ஏ.டி.டி சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

கதிர்காமம் புனித பூமிக்கு பாதயாத்திரை மூலம் செல்லும் யாத்திரிகர்களுக்காக கடந்த 15 நாள்களும் குறித்த வனப்பகுதி திறக்கப்பட்டதன் பின்னர், இவ்வாறு கழிவுகள் சேகரிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.







# சின்னம் சூட்டும் நிகழ்வு

தெனியாய மா/ என்சல்வத்தை தமிழ் வித்தியாலயத்தில் மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு அதிபர் வே. உதயகுமார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக வலயக்கல்வி பணிப்பாளர் எச்.வை. தம்மிகா பிரியதர்ஷினி கலந்துகொண்டார். அத்துடன் அயல் பாடசாலை அதிபர்கள் உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(படங்கள்: ராமு தனராஜா)








# ஜெட் வேகத்தில் அதிகரித்து, ஆமை வேகத்தில் குறையும் விலைகள்

அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றின் விலைகள் உட்பட சேவைகளின் கட்டணங்கள் குறைக்கப்பட்டிருந்தாலும், அவ்விரண்டையும் தலைநிமிர விடாத வகையில், மின்சார கட்டணங்களை அதிகரிப்பதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இது மக்களின் தலைகளில் பாறாங்கற்களை தூக்கி வைத்தாற்போலவே இருக்கின்றது.

சமையல் எரிவாயுக்கான தட்டுப்பாடு பாரியளவில் நிலவியதால், ஒவ்வொருவரும் மாற்று வழிகளை நாடிக்கொண்டனர். பெரும்பாலானவர்கள் விறகு, சிரட்டைக் கரி அடுப்புகளுக்கு மாறினர். இன்னும் சிலர் மின்சாரத்தால் இயங்கும் சாதனங்களைப் பயன்படுத்த தொடங்கினர்.

எரிவாயுக்கான தட்டுப்பாடுகள் அதிகரிக்க அதிகரிக்க, ஏனைய மாற்று அடுப்புகளுக்கான கேள்விகளும் கூடியிருந்தன. இதனால், ஒவ்வோர் அடுப்புகளின் விலைகளும் சொல்லமுடியாத அளவுக்கு உயர்ந்திருந்தன. வேண்டுமென்றே தட்டுப்பாடுகளும் ஏற்படுத்தப்பட்டன.

இதனால், அப்பொருட்களை விற்பனை செய்தோர், வேண்டுமென்றே விலைகளை அதிகரித்து, பொருட்களை விற்று, கொள்ளை இலாபத்தை தேடிக்கொண்டனர். இந்நிலையில், சமையல் எரிவாயுக்கான தட்டுப்பாடுகள் குறைந்தாலும், மாற்று வழிமுறைகளையே இன்னும் கையாளுக்கின்றனர்.

அதில், பிரதான நகரங்கள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளைச் சேர்ந்தவர்களில் பலரும், மின்சாரத்தால் இயங்கும் உபகரணங்களையே பயன்படுத்தினர். இந்நிலையில், மின்சாரக் கட்டணமும் 75 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இது மக்களுக்கு பெரும் தலையிடியாய் மாறியுள்ளது.

30 அலகுகளுக்கு குறைவாக மின்சாரத்தை பயன்படுத்தியோர் இருக்கத்தான் செய்தனர். எனினும், மின்சார உபகரணங்களின் பயன்பாட்டால், அவர்களுக்கான மின் அலகுகளும் அதிகரித்துள்ளன. 30 அலகுகளுக்கு குறைவாகப் பயன்படுத்தும் நுகர்வோருக்கான அதிகபட்ச கட்டணம் 198 ரூபாயாக இருக்கும்.

60அலகுகள் வரை அதிகபட்சமாக 599 ரூபாயும் 90 அலகுகளுக்கு மேல் பயன்படுத்தினால், அதற்கான சதவீதங்களின் அடிப்படையில் அறவிடப்படும் எனவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

30 அலகுகள் வரையில், 264 சதவீதமும் 31 முதல் 60 அலகுகள் வரையிலும் 211 சதவீதமும் 61 முதல் 90 அலகுகள் வரையிலும் 125 சதவீதமும் 91 அலகு முதல் 120 அலகுகள் வரையிலும் 89 சதவீதமும், 121 முதல் 180 வரை 79 சதவீதம் என்ற அடிப்படையில் கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளது.

இந்த அதிகரிப்புகள் யாவுமே, பாரிய தாக்கத்தை செலுத்தும். கொரோனாவுக்குப் பின்னர், முழுமையாக முடங்கிய தொழிற்சாலைகள் இருக்கின்றன. சிறுசிறு தொழிற்சாலைகள் இயங்குகின்றன. அவ்வாறான தொழிற்சாலைகளும் பெரிதும் பாதிக்கப்படும்.

குடியிருப்பாளர்களும் வாடகை வீடுகளில் குடியிருப்போரும் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும். சிற்சில உணவு பண்டங்களின் விலைகளும் அதிகரிக்கப்படுமென எச்சரிக்கப்பட்டுள்ளது. விலைகள் ஜெட் வேகத்தில் அதிகரித்து, ஆமை வேகத்தில் குறைக்கப்படுகின்றன.

இந்நிலையில், மின்சார கட்டணங்களை அதிகரித்தமையால், இதர விலைகளின் குறைப்புகளை, நுகர்வோரால் அனுபவிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆகையால், மின் கட்டண விலை அதிகரிப்பு தொடர்பில், ஒன்றுக்கு இரண்டு தடவை சிந்திப்பதே சிறந்தது.



தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

முதுமையை ஏற்றுக்கொள்ளுங்கள்; இளமையும் முதுமையும் புதுமை அல்ல! முதியவர்கள் தங்கள் உருவத்தை மதிப்புடன் கருதிக்கொள்ள வேண்டும். தங்கள் பெருமை தெரியாமல், நம்பிக்கை இழக்கத்தேவையில்லை.

முதுமை வாழ்க்கையின் ஒரு சொத்து. அனுபவ ஞானம், கல்வி, இயற்கையின் மாற்றங்களை உணருதல் போன்ற திறன்கள், இவர்களுக்கே இருக்கின்றன.

இல்லங்களில் தாத்தா, பாட்டி இருப்பதால், அவர்கள் அனுபவங்களை அறிய முடிகிறது. மேலும், இயற்கை வைத்தியம், தொழில் அனுபவங்களைக் கூறுவது, பேரன், பேத்திகளுக்கு அனுசரணையாக இருத்தல், கல்வியூட்டல், குடும்ப முன்னேற்றங்களுக்கு அறிவூட்டுதல் எனப் பல விடயங்கள் அடங்கியுள்ளன.

எல்லா உயிரினங்களும் அந்தந்தப் பராயத்தில், அழகுடன் பிரகாசிக்கும். குழந்தைகள் தனி அழகு. இளைஞர்களாக மாறும்போது, வாலிபம் நிறைந்த தனி அழகு. இந்தப் பருவம் எழுச்சி மிக்க பேரழகு.

முதுமை வந்ததும் அறிவு, அன்பு, கருணை என்பன பொதிந்திருக்கும் தோற்றம், அழகோ அழகு. அனுபவ ஞானத்தை அளிப்பவர்களே முதியவர்கள் தான்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## சர்வதேச நாணய நிதியம்:

# கலைய வேண்டிய மாயைகள்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

சர்வதேச நாணய நிதியத்திடம் நாட்டை அடகு வைப்பது என்று, பலர் கங்கணம் கட்டிக்கொண்டு திரிகிறார்கள்.

இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு, சர்வதேச நாணய நிதியம்தான் ஒரே வழி என்று, மீண்டும் மீண்டும் சொல்லப்படுகிறது. சர்வதேச நாணய நிதியம் கடனை வழங்கி விட்டால், அனைத்துப் பிரச்சினைகளும் விரைவில் தீர்ந்து விடும் என்ற பிம்பம், தொடர்ச்சியாகவும் கவனமாகவும் கட்டமைக்கப்பட்டு வருகிறது.

இன்று, சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெறுவது பற்றிய விமர்சனங்களை முன்வைப்போர், மாற்றுக் கருத்துகளைத் தெரிவிப்பவர்கள், எதிர்ப்பாளர்கள் ஆகியோர் எதிரிகளாகவும் தேசத்துரோகிகளாகவும் கட்டமைக்கப்படுகிறார்கள்.

மாற்றுக் கருத்துக்கு மதிப்பற்ற சமூகத்தைத் திட்டமிட்டு கட்டமைப்பதற்கு, ஆட்சியாளர்களும் அதிகாரத்தில் உள்ளவர்களும் செல்வந்தர்களும் தொடர்ந்து முயற்சித்துக் கொண்டே இருக்கிறார்கள்; இது மிகவும் அபாயகரமானது.

சர்வதேச நாணய நிதியம் மீதான விமர்சனங்களைக் கண்டு ஆட்சியாளர்கள் கலங்குகிறார்கள். அதனாலேயே மாற்றுக் கருத்தாளர்கள் முடக்கப்படுகிறார்கள். இப்போது இலங்கையில் நடந்து கொண்டிருப்பது, இனி நடக்கப் போகும் ஒரு பெரிய பேரழிவுக்கான முன்னோட்டம் மட்டுமே!

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு சர்வரோக நிவாரணி, சர்வதேச நாணய நிதியத்திடமே இருக்கிறது என்பது கிட்டத்தட்ட முடிந்த முடிவாகி விட்டது. சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வாங்குவது பற்றிக் கதைப்பவர்கள், அடிப்படையான மூன்று விடயங்களை திட்டமிட்டு மறைக்கிறார்கள்.

முதலாவது, சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கை மேற்கொள்வதன் ஊடு, இலங்கையின் பொருளாதார நெருக்கடியை தீர்க்க முடியும் என்று ஆதரிப்பவர்கள், எவ்வாறு இந்த நெருக்கடியை கையாள்வது என்பது பற்றி விரிவாகப் பேசுவதில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனானது, எவ்வாறு இலங்கையின் கடனை அடைக்க உதவப் போகிறது என்பது பற்றி, இதுவரையும் வாய் திறக்கவில்லை.

இந்த இடத்தில், சில விடயங்களை ஆணித்தரமாக பேச வேண்டி உள்ளது. இலங்கையின் மொத்த அந்நியக் கடன் அண்ணளவாக 52 பில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெறக்கூடிய அதிகபட்சக் கடன், நான்கு பில்லியன் அமெரிக்க டொலர் மட்டுமேயாகும். அத்தொகையும் பல்வேறு தவணைகளிலேயே வழங்கப்படும். எனவே, சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கிடைக்கும் கடன் தொகை, இலங்கையின் கடனை அடைக்க போதுமானது அல்ல.

வங்குரோத்து நிலையில் உள்ள இலங்கை, சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெறுவதனூடு, மீண்டும் சர்வதேச அரங்கில் கடன் பெறுவதற்கு தகுதியானதாக மாறுகிறது. இதனால், இலங்கையால் மீண்டும் கடனை பெற்றுக் கொள்ள இயலும். இந்த ஒற்றைக் காரணத்துக்காகவே, இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடம் கடனைப் பெற்றுக்கொள்ள அடம்பிடிக்கிறது.

இப்பொழுது முன்மொழியப்படும் யோசனைகள் அனைத்தும் மேலும், இலங்கையை கடனாளி ஆக்குவதைப் பற்றியதேயன்றி, இலங்கையின் கடனைக் குறைக்கும் நோக்கம் கொண்டவை அல்ல.

தற்போதைய கதையாடல்களின் ஊடு, இலங்கையின் பொருளாதார நெருக்கடி என்பது, கடன் வாங்க இயலாது போனமை என்பதாகச் சுருக்கப்பட்டுள்ளது. ஆனால், உண்மையில் இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் பல்பரிமாண அம்சங்கள் பேசப்படாமல் தவிர்க்கப்படுகின்றன.

குறிப்பாக, நாட்டில் புரையோடிப் போயுள்ள ஊழல் முக்கியமான காரணம். கடந்த மூன்று தசாப்த காலங்களில், விலக்கில்லாது எல்லா அரசாங்கங்களும் ஊழலில் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபித்துள்ளன.

ஆனால், இன்று இது பேசுபொருள் அல்ல. திசைதிருப்புதல்களின் ஊடாக, பொருளாதார நெருக்கடிக்கான உண்மையான காரணிகள் பேசப்படாமல், பார்த்துக் கொள்ளப்படுகின்றன. ஏனெனில், என்றாவது இவை பொதுத்தளத்தில் விரிவாகப் பேசப்படும் போது, கட்டமைப்பு ரீதியான மாற்றம் தவிர்க்க இயலாததாகும். அதை ஆட்சியாளர்களும் அரசியல்வாதிகளும் அதிகாரத்தை ருசிப்போரும் விரும்பவில்லை.

இரண்டாவது அம்சம், சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை கடன் பெறுகின்ற முதலாவது சந்தர்ப்பம் இதுவன்று. 1965ஆம் ஆண்டு முதல் இலங்கை தொடர்ச்சியாக, சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்றுள்ளது. இதுவரை 16 தடவைகள் இவ்வகையான கடன் திட்டங்களுக்குள் இலங்கை ஆட்பட்டு உள்ளது.

தொடர்ச்சியாகக் கடன் வாங்கிய போதும், இலங்கையால் அதன் அந்நியக் கடனைக் குறைக்கவோ, அடைக்கவோ இயலவில்லை. மாறாக, இலங்கையின் அந்நியக் கடனின் தொகை, தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ளது.

இந்நிலையில் இம்முறை பெறப்படுகின்ற கடன் மட்டும், இலங்கையின் கடன் சுமையை எவ்வாறு தீர்க்கும் என்பது பற்றி, யாரும் கருத்துரைப்பதில்லை. சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெறுகின்ற ஒவ்வொரு முறையும், இலங்கை தொடர்ச்சியான சமூகநல வெட்டுகளை நடைமுறைப்படுத்தி வந்துள்ளது என்பதையும் நினைவில் கொள்வது தகும்.

வரலாற்றில் இருந்து நாம் பாடம் கற்பதாயின், சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் பெறப்பட்ட ஒவ்வொரு தடவையும், ஒருங்கே சமூகநல வெட்டுகளும் அந்நிய கடன் அதிகரிப்பும் நடந்துள்ளன.

பேசப்படாத மூன்றாவது முக்கிய விடயம், இலங்கைக்கு கடன் வழங்கியவர்கள் யார் என்கிற விடயத்தை, இன்று வரை இலங்கை அரசாங்கம் இரகசியமாக வைத்துள்ளது.

குறிப்பாக, இலங்கைக்கு கடன் வழங்கிய தனியார் நிறுவனங்கள் எவை என்கிற தகவல், இன்று வரை பகிரங்கப்படுத்தப்படவில்லை. இது இரண்டு அம்சங்களை கோடிட்டுக் காட்டுகிறது.

முதலாவது, இலங்கைக்கு கடன் வழங்கியவர்கள் யார் என்பதை அறிகின்ற உரிமை, அனைத்து இலங்கையர்களுக்கும் உண்டு. ஆனால், அந்த உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது, இலங்கை அரசாங்கம் குறித்த விடயத்தில் இரகசியம் காப்பதானது, கடன் வழங்குநர்கள் குறித்த சந்தேகங்களை எழுப்புகிறது. இதை மறைப்பதற்காக, சீனக் கடன்தான் இலங்கையை பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளியது என்ற பொய், திரும்பத் திரும்பச் சொல்லப்படுகிறது.

கொள்கை வகுப்பாளர்கள், நிபுணர்கள் மத்தியில், சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்வது, நெருக்கடியிலிருந்து இலங்கைக்கு ஒரு பாதையை புலப்படுத்தும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளது.

ஆனால், சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்குவதன் பெயரால், இலங்கையில் கட்டமைப்பு மாற்றங்களைக் கோருகிறது. இந்த மாற்றங்கள் இலங்கையில் எஞ்சியுள்ள சமூகநலத் திட்டங்களையும் முழுமையாக அழித்துவிடக் கூடியவை.

சர்வதேச நாணய நிதியத்திடம் சரணாகதி அடைவதையே நோக்காகக் கொண்டுள்ள அரசாங்கத்திடம், எதிர்பார்க்க அதிகமில்லை.

‘அந்நியத் தலையீடு’, ‘இறையாண்மைக்கு சவால்’ என்று அடிக்கடி கூச்சலிடுகின்ற பேரினவாதிகளையும் கொண்டுள்ள அரசாங்கமே, சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதனூடு, இலங்கையின் இறையாண்மையை அடகுவைக்கும் செயலை முன்னெடுக்கிறது.

கவனிப்புக்குரியது யாதெனில், கடனை திருப்பிச் செலுத்துவதில் அக்கறை காட்டுகிற அரசாங்கம், திருடப்பட்ட, கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை மீட்டெடுப்பதில் கவனம் செலுத்தவில்லை. மாறாக, இன்னமும் கடனைப் பெறுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளும் முகமாக, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு உட்படுகிறது.

எந்தக் கட்டமைப்பு ஊழலை வரன்முறையின்றி சாத்தியமாக்கியதோ, அதே கட்டமைப்பில் மாற்றங்கள் நிகழும் என எதிர்பார்ப்பது மடத்தனம்.

சர்வதேச நாணய நிதியத்துடன், ‘அலுவலர் நிலை உடன்பாடு’ (*Staff Level Agreement*) விரைவில் எட்டப்படும் என்று, ஜனாதிபதி தனது பாராளுமன்ற உரையில் தெரிவித்தார். கேள்வி யாதெனில், இந்த உடன்பாட்டை பகிரங்கப்படுத்த அரசாங்கம் தயாரா? மடியில் கனமில்லையாயின் வெளிப்படுத்த வேண்டியதுதானே!

*Devil is in the detail* என்றொரு கூற்று ஆங்கிலத்தில் உண்டு. இந்தக் கூற்று, இதற்கு மிகவும் பொருந்தும். சர்வதேச நாணய நிதியத்திடம் உடன்படிக்கை எட்டப்பட்டது என்ற செய்தியால் பலனில்லை.

என்னென்ன விடயங்கள் பேசப்பட்டன என்பதும் இலங்கை அரசாங்கம் உடன்பட்ட நிபந்தனைகள் எவை என்பன, பகிரங்கப்படுத்த வேண்டும்.

மக்கள் இப்போது, அரசாங்கத்திடம் கோர வேண்டியது, வெளிப்படைத் தன்மையையே ஆகும். மூடிய கதவுகளுக்குப் பின்னால், எமது தலைவிதியை யாரோ சிலர் முடிவு செய்வதை அனுமதிக்க இயலாது; அனுமதிக்கவும் கூடாது.

நாட்டின் வளங்களும் சொத்துகளும், இலங்கை குடிமக்களுக்குச் சொந்தமானவை; மக்களுக்காகவை. அவற்றை மக்களின் அனுமதியின்றி பகிர்ந்தளிப்பதோ, தனியார் மயமாக்குவதோ, குத்தகைக்கு விடுவதோ மக்களை அவமதிக்கும் செயல் மட்டுமல்ல; வீட்டுக்குள் அனுமதியின்றிப் புகுந்து திருடும் செயலுக்கு ஒப்பானது.

## கடிதங்கள்

### ஆரோக்கியபுரம், அமைதிபுரம்:

## குடிநீருக்குச் சிரமம்

ஆரோக்கியபுரம், அமைதிபுரம் ஆகிய கிராமங்களில் வாழும் சுமார் 147 வரையான குடும்பங்கள், சுத்தமாக குடிநீர் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டம், துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்டதும், கிளிநொச்சி மாவட்டத்தின் அக்கராயன் பிரதேசத்துக்கு அண்மித்த பகுதியிலும் காணப்படும் ஆரோக்கியபுரம், அமைதிபுரம் ஆகிய கிராமங்களில், குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை பெற்றுக்கொள்வதில், பெரும் சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றது.



தற்போது குறித்த பகுதிகளில், சுத்தமான குடிநீர் பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும் மேற்படி கிராமத்தில் இரண்டு பொதுக் கிணறுகள் மாத்திரமே குடிநீர் பெறுவதற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் ஒரு கிணறு தற்போதைய வரட்சி காரணமாக, நீரின்றி போயுள்ளது. மற்றைய கிணற்றில் இருந்து, நாளாந்தம் குறிப்பிட்ட அளவு தண்ணீரை மட்டுமே பெறக்கூடியதாவே உள்ளது. இதனால் குறித்த பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு காணப்படுகின்றது. சில வேளைகளில் குடிநீருக்காக நீண்ட தூரம் சென்று, குடிநீர் பெற வேண்டி உள்ளதாகவும் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு, தமது கிராமங்களில் குடிநீரின்மை, போக்குவரத்து வசதிகளின்மை, காட்டு யானைகளின் தொல்லை எனப் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வாழ்வதாக பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

–யது பாஸ்கரன்

நிலைபேறான வளர்ச்சியைப் பதிவு செய்த

# எக்ஸ்போ லங்கா ஹோல்டிங்ஸ் பிஎல்சி

சரக்குக் கையாளல், ஒய்வு விருந்தோம்பல் மற்றும் முதலீடுகள் போன்ற துறைகளில் ஈடுபாட்டைக் கொண்டுள்ளதுடன், 34 நாடுகளின் 70 க்கும் அதிகமான நகரங்களில் தனது பிரசன்னத்தைக் கொண்டுள்ள எக்ஸ்போ லங்கா ஹோல்டிங்ஸ் பிஎல்சி, 2022 ஜுன் 30 ஆம் திகதியுடன் நிறைவடைந்த நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் உறுதியான நிதிப் பெறுபேறுகளைப் பதிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

உறுதியான தந்திரோபாய நிறைவேற்றம் மற்றும் அடிப்படை அம்சங்களில் கவனம் செலுத்தல் போன்றவற்றினூடாக எக்ஸ்போ லங்கா ஹோல்டிங்ஸ் பிஎல்சி, ரூ. 235.1 பில்லியனை (வருடாந்த உயர்வு +146%) வருமானமாகவும், தேறிய வட்டியாக ரூ. 36.9 பில்லியனையும் (வருடாந்த உயர்வு +156%) மற்றும் வரிக்குப் பிந்திய இலாபமாக ரூ. 20.1 பில்லியனையும் (வருடாந்த உயர்வு +220%) பதிவு செய்துள்ளது.

எக்ஸ்போ லங்கா ஹோல்டிங்ஸ் பிஎல்சி குழும பிரதம நிறைவேற்று அதிகாரி ஹனீஃவ் யூசுஃவ் கருத்துத் தெரிவிக்கையில், “எளிமையான சொத்துகளைக் கொண்ட எமது வியாபார மாதிரி, சர்வதேச வலையமைப்பு, உறுதியான ஐந்தொகை, வியாபாரத்தை ஒன்றிணைந்து அணுகுவது, உறுதியான தலைமைத்துவம் போன்றன, சகல பங்காளர்களுக்கும் எக்ஸ்போ லங்கா ஹோல்டிங்ஸ் பிஎல்சியை பிரத்தியேகமான பெறுமதிக் கூறாக அமையச் செய்துள்ளன” என்றார்.



குழுமம் தொடர்ச்சியாக உறுதியான வருமதிகளைப் பதிவு செய்திருந்ததுடன், கடந்த பன்னிரண்டு மாதங்களில் (trailing twelve month) 96.16% எனும் பங்கு உரிமை மீதான வருமானத்தை (ROE) பதிவு செய்து, குழுமத்தால் பின்பற்றப்பட்டிருந்த வினைத்திறன் வாய்ந்த சொத்துகள் பயன்பாட்டு தந்திரோபாயங்கள், மேம்படுத்தப்பட்ட தொழிற்பாட்டு ஈடுபாடு போன்றவற்றில் பிரதிபலிப்பை ஏற்படுத்தியிருந்தது.

இலங்கை ரூபாயின் மதிப்பிறக்கத்தின் காரணமாக அந்நியச் செலாவணி வருமதி ரூ. 6.9 பில்லியனை பதிவு செய்திருந்ததுடன், நிறுவனத்தின் தேறிய சொத்துப் பெறுமதி ரூ. 25 பில்லியனினால் அதிகரித்திருந்தது. இதனூடாக கடந்த சில ஆண்டுகளில் நிறுவனத்தின் வியாபாரக் கோவை மற்றும் ஐந்தொகை போன்றன கட்டியெழுப்பப்பட்டு உள்ளமைக்கான மேலதிக ஆதாரமாக இது அமைந்துள்ளது.

சரக்குக் கையாளல் துறையில் சர்வதேச சந்தைச் சூழல்கள் மற்றும் பாரம்பரியமான கேள்வி குறைவான போக்குகள் போன்றன நிலவிய போதிலும், தந்திரோபாயத்தில் கவனம் செலுத்துவதனூடாக, அதன் செயற்பாடுகளை வெளிப்படுத்த முடிந்திருந்ததுடன், மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் துறையால் தொடர்ச்சியான வளர்ச்சியை பதிவு செய்ய முடிந்தது. இந்தப் பிரிவின் வருமானம் ரூ.233 பில்லியனாகவும் (வருடாந்த உயர்வு +146%), தேறிய இலாபம் ரூ. 36.2 பில்லியனாகவும் (வருடாந்த உயர்வு +154%) மற்றும் வரிக்குப் பிந்திய இலாபம் ரூ. 18.8 பில்லியனாகவும் (வருடாந்த உயர்வு +183%) பதிவாகியிருந்தது.

பிரதான சந்தைகளில் குறைந்தளவு கேள்வி காணப்பட்டமையால், ஆகாய சரக்கு பொருட்கள் பிரிவு இந்தக் காலாண்டில் வீழ்ச்சியை பதிவு செய்திருந்தது. மாறாக, கடல்மார்க்க சரக்கு கையாளல் அதிகளவு வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. இந்தத் துறையின் மீது காண்பிக்கப்பட்டிருந்த அதிகளவு கவனத்தினூடாக இந்த உறுதியான வளர்ச்சியை பதிவு செய்யக்கூடியதாக இருந்தது. உறுதியான பங்காளர் வலையமைப்பு, அதிகரித்த வாடிக்கையாளர் ஊடுருவல், மேம்படுத்தப்பட்ட ஆற்றல்திறன் போன்றன, கடல்சார் சரக்குக் கையாளல் பிரிவுக்கு உறுதியான நிலையை பேண உதவியிருந்தன.

# கொமர்ஷல் வங்கியின் ‘Forex Plus’

கொமர்ஷல் வங்கி வெளிநாட்டு நாணய விசேட நிலையான வைப்புக் கணக்குத் திட்டம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது. வெளிநாட்டு மூலங்களில் இருந்து முதலீடுகளை கவருவதற்கான ஒரு மேலதிக செயற்பாடாக இந்தத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

‘Forex Plus’ என்று அழைக்கப்படும் இந்தப் புதிய திட்டம், ஐந்தாண்டுகள் வரையான வைப்புக் காலத்துக்கு வருடாந்தம் 9 சதவீதம் வரையான வட்டியை வழங்குகின்றது. இத்திட்டத்தில் நான்கு வகையான வெளிநாட்டு நாணயங்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கையின் இன்றைய பொருளாதார சூழலில் மிகவும் அவசியமான வெளிநாட்டு நாணய முதலீட்டைக் கருத்தில் கொண்டே Forex Plus திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்தோடு தமது வாடிக்கையாளர்கள் போட்டிமிக்க சூழலில் மிகவும் கஷ்டப்பட்டு உழைத்த வெளிநாட்டு பணத்தை மிகவும் நம்பிக்கையான பின்னணியில் சேமிப்பதற்கான ஒரு வாய்ப்பை வழங்குவதும் இதன் நோக்கமாகும் என்று வங்கி அறிவித்துள்ளது.

இந்த வெளிநாட்டு நாணய வைப்புக் கணக்கை இலங்கையர்கள் அல்லாதவர்களும், இரட்டை பிரஜாவுரிமை கொண்ட இலங்கையர்கள், இலங்கையில் வசிக்கும் அல்லது இலங்கைக்கு வெளியில் வசிக்கும் இலங்கையில் நிரந்தர வதிவிட வசதி உடையவர்கள், கடல் கடந்த நாடுகளில் தொழில்புரியும் இலங்கையர்கள், கடல்கடந்த நாடுகளில் ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனிகளில் பணிபுரிபவர்கள் என பல்வேறு தரப்பினர் ஆரம்பிக்கலாம்.

இந்தத் தகுதிகள் உடையவர்கள் தமது Forex Plus வெளிநாட்டு நாணய கணக்கை குறைந்த பட்சம் 5,000 அமெரிக்க டொலருடன் அல்லது அதற்கு ஈடான யூரோ, ஸ்டேர்லிங் பவுண், அவுஸ்திரேலிய டொலர் என்பவற்றில் மூன்று அல்லது ஐந்தாண்டு காலத்துக்குரிய வைப்பாகத் திறக்கலாம். வைப்புச் செய்யப்படும் வெளிநாட்டு பணத்தின் வகை மற்றும் அதற்கான காலம் என்பனவற்றின் அடிப்படையில் வட்டி வீதம் தீர்மானிக்கப்படும். தன்னிச்சையாகப் புதுப்பிக்கப்படும் வகையில் இந்த வைப்புத் திட்டம் அமையும் என்று வங்கி அறிவித்துள்ளது.

அமெரிக்க டொலர் மூலமான வைப்பு, ஐந்தாண்டு காலத்துக்கு அமையும் பட்சத்தில், வருடாந்தம் 9.5 சதவீத வட்டியைப் பெற்றுக் கொள்ள முடியும். இதே காலப்பகுதிக்கு யூரோ, ஸ்டேர்லிங் பவுண் என்பவற்றுக்கு வருடாந்தம் 6 சதவீத வட்டி வழங்கப்படும். அவுஸ்திரேலிய டொலருக்கு

**Forex Plus வெளிநாட்டு நாணய கணக்கை குறைந்த பட்சம் 5,000 அமெ. டொலருடன் அல்லது அதற்கு ஈடான யூரோ, ஸ்டேர்லிங் பவுண், அவுஸ்திரேலிய டொலரில் திறக்கலாம்**

வருடாந்தம் 7 சதவீத வட்டி வழங்கப்படும். இந்தத் திட்டத்தின் ஆரம்பம் முதல் இந்த வட்டி வீதம் செல்லுபடியாகும். வங்கி மேற்கொள்ளும் செயற்பாடுகளுக்கு அமைய, காலத்துக்கு காலம் இது மாற்றம் அடையலாம் என்றும் வங்கி மேலும் அறிவித்துள்ளது.

Forex Plus க்கான வைப்புகளை, வங்கி முறைமைகள் மூலம், வெளிநாட்டு நாணயமாற்றின் மூலம், கணக்கு வைத்திருப்பவரின் சொந்த வெளிநாட்டுக் கணக்கின் மூலம், கணக்கு வைத்திருப்பவருக்கு அனுப்பப்படும் பணத்தின் மூலம், உள்ளக முதலீட்டுக் கணக்கின் மூலம், கடல்கடந்த வங்கி அலகின் மூலம், உள்ளக வங்கி வரவுச் செயற்பாடுகள் மூலம், கணக்கு வைத்திருப்பவர் இலங்கை சுங்கத் திணைக்களத்தின் முறையான அனுமதியுடன் நாட்டுக்குள் கொண்டு வந்த வெளிநாட்டு பணத்தின் மூலம் செய்ய முடியும்.




ஸ்ரீநகர்

# காஷ்மீரில் ஊடுருவல் முயற்சி முறியடிப்பு

**இராணுவ வீரர்கள் மூவர் வீரமரணம்; 2 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை**

காஷ்மீரில் ரஜோரி மாவட்டத்தில் உள்ள தர்ஹால் இராணுவ முகாமுக்குள் நேற்று (11) காலை நுழைய முயன்ற இரண்டு தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலின் போது மூன்று இராணுவ வீரர்கள் வீரமரணம் அடைந்துள்ளனர்.

“பார்கல் இராணுவ முகாமில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பு வேலியைத் தாண்ட சிலர் முயன்றனர். அவர்களை இராணுவ வீரர்கள் சுட்டு வீழ்த்தினர். முன்னதாக அந்த தீவிரவாதிகளும் பதில் தாக்குதல் நடத்தினர்.அதில், மூன்று வீரர்கள் வீர மரணமடைந்தனர். இரண்டு இராணுவ வீரர்கள் காயமடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்” என்றார்.




ஜம்மு-காஷ்மீரின் பகல்காம் மாவட்டம், வோட்டர்ஹோல் பகுதியில் லஷ்கர் இ தொய்பாவை சேர்ந்த தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாக பாதுகாப்பு படையினருக்கு இரகசிய தகவல் கிடைத்தது. அந்த இடத்தை பாதுகாப்புப் படை வீரர்கள் நேற்று முன்தினம் (10) சுற்றி வளைத்தனர். அப்போது தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டும் குண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தினர். இருதரப்புக்கும் இடையே பல மணி நேரம் சண்டை நீடித்தது.

மயூர்பஞ்ச்

இன்னொருவரின் கால்களை

# வாயால் சுத்தம் செய்த மாற்றுத்திறனாளி



ஒடிசாவின் மயூர்பஞ்ச் பகுதியில் ஒரு மாற்றுத்திறனாளி ஒருவரை, இரண்டு பேர் சித்திரவதை செய்யும் காட்சிகள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அந்த காட்சிகளில் ஒரு நபர் தடியுடன் தோன்றுகிறார். அவர் ஒரு மாற்றுத்திறனாளியை மிரட்டி மற்றொருவரின் கால்களை வாயால் சுத்தம் செய்ய வற்புறுத்துகிறார். அவர் மறுக்க, பின்னர் தலைமுடியை பிடித்து அவர்களே அவரை சுத்தம் செய்ய வைக்கின்றனர்

அப்படி சுத்தம் செய்த பின்னரே அந்த மாற்றுத்திறனாளியை விடுகின்றனர். இதன்பிறகு அந்த மாற்றுத்திறனாளி தரையில் அமர்ந்து அழுகிறார். இடையில் இருவரும் அந்த மாற்றுத்திறனாளியை மிரட்டுகின்றனர். அவர்களுக்கு பின்னால் சிலர் அமைதியாக பயந்தபடி நிற்கின்றனர்.

இதன்பின் நடந்த விசாரணையில் இது ஒரு போதைப்பொருள் ஒழிப்பு மையத்தில் நடந்த சம்பவம் என்பது தெரியவந்துள்ளது.

இந்நிலையில், மாற்றுத்திறனாளியை இழிவுபடுத்திய இருவரை தேடிவருகின்றனர். இதுதொடர்பாக மயூர்பஞ்ச் எஸ்பி பதிவிட்டுள்ள டுவீட்டில், “இது தொடர்பாக நாங்கள் முறையாக வழக்குப் பதிவு செய்துள்ளோம். மேலும் இருவரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவோம். இந்த போதை ஒழிப்பு மையங்களை மூட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்” என்றுள்ளார்.

திருச்சி

# போதையில் தடுமாறிய பாடசாலை மாணவிகள்

தமிழகத்தில் கஞ்சா, குட்கா போன்ற புகையிலை பொருட்கள் அதிகளவில் விற்பனை செய்யப்படுவதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வடமாநிலங்களில் இருந்து கொண்டு வந்து பெட்டிக்கடை முதல் பெரிய கடை வரை விற்பனை செய்யப்படுகின்றது. இதனை தடுக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் வருகிறது. இந்தநிலையில் நேற்றுமுன்தினம் (10) முதல், தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆலோசனையின் பிரகாரம், தமிழகம் முழுவதும் விளையாட்டு அரங்குகள், பள்ளி வளாகங்களில் போதை பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் கரூரில் சீருடை அணிந்திருந்த பாடசாலை மாணவிகள் மூவர், போதை மயக்கத்தில் நடுவீதியில் தடுமாறி விழுந்த சம்பவம் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தி உள்ளது.

இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த அப்பகுதி கடைக்காரர்கள், ஏதோ உடல்நலக்குறைவால் இப்படி ஆகியிருக்கலாம் என்று நினைத்து, அம்புலன்ஸூக்கு தகவல் அளித்தனர்.

அம்புலன்ஸை கண்டதும் ஒரு மாணவி சுதாகரித்துக்கொண்டு அங்கிருந்து நழுவி சென்று விட்டார். மற்ற இரண்டு மாணவிகளால் நகர முடியவில்லை. அந்த மாணவிகள் போதையில் தள்ளாடியது தெரிந்தது.

இந்த நிலையில் வைன் குடித்தால் மேலும் நிறமாக மாறலாம் என யாரோ சொன்ன தகவலை கேட்டு, வைன் வாங்கி குடித்ததாக, அம்மாணவிகள் மூவரும் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளனர்.



புதுடெல்லி

# உச்சநீதிமன்றத்தில் முகக்கவசம் கட்டாயம்



கொரோனா அலை உலகையே அச்சுறுத்தி வந்த போது, வீட்டிற்குள்ளேயே முகக்கவசம் அணிந்திருக்கும் வகையில், மிகவும் மோசமாக நிலைமை ஏற்பட்டிருந்தது.

அதன் பிறகு, தடுப்பூசி, கடுமையான கட்டுப்பாடுகள் கொண்டு வந்த பின்பு அது கொஞ்சம் சரியாக தொடங்கியது. தற்போது மீண்டும், கொரோனா, குரங்கம்மை என அச்சுறுத்தல்கள் வர தொடங்கியுள்ளதால், பல்வேறு இடங்களில் முகக்கவசம் மீண்டும் கட்டாயமாக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், உச்சநீதிமன்றத்தில் புதிய உத்தரவை தலைமை நீதிபதி என். வி.ரமணா பிறப்பித்துள்ளார்.

உச்சநீதிமன்றத்துக்குள்ளும் வளாகத்திலும் அனைவரும் முகக்கவசங்களை அணிய வேண்டும். அனைத்து வழக்கறிஞர்களும் வாதாடும் போதும் முகக்கவசம் கட்டாயம் அணிய வேண்டுமென அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதுடெல்லி

# சர்மாவுக்கு எதிரான வழக்குகளை மாற்றவும்



பாரதிய ஜனதா கட்சியின் (பா.ஜ.க) செய்தித் தொடர்பாளராக இருந்த நுபுர் சர்மா தெரிவித்த சர்ச்சை கருத்துகள், நாடு முழுவதும் பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியது.

ஆனால், நுபுர் சர்மாவின் கருத்துக்கு ஆதரவு தெரிவித்த உதய்ப்பூர் தையல் தொழிலாளி, கழுத்தறுத்து கொலை செய்யப்பட்டார்.

இதற்கிடையில், நாடு முழுவதும் பல்வேறு நகரங்களில் நுபுர் சர்மா மீது வழக்குகள் தொடரப்பட்டன. இந்நிலையில் தன் மீது நாட்டின் பல மாநிலங்களில் தொடரப்பட்ட வழக்கை புதுடெல்லிக்கு மாற்றக் கோரி உச்சநீதிமன்றத்தில் நுபுர் சர்மா மனுவொன்றை தாக்கல் செய்தார்.

இம்மனுவை விசாரித்த நீதிபதிகள், நுபுர் சர்மா பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கண்டனம் தெரிவித்தனர். மேலும், நுபுர் சர்மாவை கைது செய்வதற்கு உச்சநீதிமன்றம் இடைக்கால தடையும் விதித்திருந்தது.

இந்நிலையில் நுபுர் சர்மா தொடர்ந்து வழக்கு உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. நுபுர் சர்மாவுக்கு எதிராக நாட்டின் பல பகுதிகளில் தொடரப்பட்ட அனைத்து வழக்குகளையும் புதுடெல்லி பொலிஸூக்கு மாற்ற உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

முதலாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில்

# மே. தீவுகளை வென்றது நியூசிலாந்து




மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டியில் நியூசிலாந்து வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், கிங்ஸ்டனில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற மே. தீவுகளின் அணித்தலைவர் நிக்கலஸ் பூரான், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில் இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, அணித்தலைவர் கேன் வில்லியம்ஸின் 47 (33), டெவோன் கொன்வேயின் 43 (29), ஜேம்ஸ் நீஷமின் ஆட்டமிழக்காத 33 (15) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 185 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஒடியன் ஸ்மித் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதோடு, ஹெய்டன் வோல்ஷ் ஜூனியர் 4-0-29-0 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

பதிலுக்கு 186 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மே. தீவுகள், ஷமராஹ் ப்ரூக்ஸின் 42 (43), றொமாறியோ ஷெப்பர்ட்டின் ஆட்டமிழக்காமல் 31 (16), ஒடியன் ஸ்மித்தின் ஆட்டமிழக்காத 27 (12), ஜேஸன் ஹோல்டரின் 25 (19), றொவ்மன் பவலின் 18 (12), பூரானின் 15 (08) ஓட்டங்களுக்கு மத்தியில் 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 172 ஓட்டங்களையே பெற்று 13 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில், மிற்செல் சான்ட்னெர் 4-0-19-3 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக சான்ட்னெர் தெரிவானார்.

இரண்டு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது போட்டியானது நாளை மறுதினம் நள்ளிரவு 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

# தென்னாபிரிக்கத் தொடரில் 9 இலங்கை வீரர்கள்



தென்னாபிரிக்காவின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரில் ஒன்பது இலங்கை வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

சாமிக கருணாரத்ன, மகேஷ் தீக்‌ஷன, மதீஷன பத்திரண, அகில தனஞ்சய, நிரோஷன் டிக்வெல்ல, சீக்குகே பிரசன்னா, நுவான் பிரதீப், தனஞ்சய லக்‌ஷன், விஷ்வ பெர்ணாண்டோ ஆகிய வீரர்களே குறித்த தொடரில் இடம்பெற்றுள்ளனர்.

இந்நிலையில், தொடரின் அனைத்து அணிகளும் இந்தியன் பிறீமியர் லீக் அணிகளின் நிர்வாகிகளால் நிர்வகிக்கப்படுகின்ற நிலையில், சென்னை சுப்பர் கிங்ஸின் அணியான ஜொஹன்னஸ்பேர்க் அணியாலேயே தீக்‌ஷன கைச்சாத்திடப்பட்டுள்ளார்.

டயலொக் பாடசாலைகள் றக்பி லீக்:

# றோயலா, இசிப்பத்தனவா?

Dialog SCHOOLS RUGBY

டயலொக் பாடசாலைகள் றக்பி லீக் தொடரானது ஏழு வாரங்களாக இடம்பெற்று பல மயிரிழையில் முடிவு மாறிய போட்டிகள், அதிர்ச்சிகளுக்கு மத்தியில் முக்கியமான றோயல் கல்லூரிக்கும், இசிப்பத்தனக் கல்லூரிக்குமிடையிலான இறுதிப் போட்டியானது ஹவ்லொக் பார்க்கில் நாளை மறுதினம் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

நடப்புச் சம்பியன்களாகவுள்ள றோயலுக்கே இப்போட்டியில் வெல்வதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்ற நிலையில், நான்காவது தடவையாக தொடர்ச்சியாக அவ்வணி சம்பியனாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வாறாயினும், இதுவரையில் 2016ஆம் ஆண்டுக்குப் பின்னர் சம்பியனாக எதிர்பார்க்கும் இசிப்பத்தன்ன இம்முறை எப்போட்டியிலும் தோல்வியடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சிம்பாப்வேக்கெதிரான மூன்றாவது ODI போட்டியில்

# ஆறுதல் வெற்றி பெற்ற பங்களாதேஷ்



சிம்பாப்வேக்கெதிரான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் (ODI) பங்களாதேஷ் ஆறுதல் வெற்றி பெற்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், முதலிரண்டு போட்டிகளிலும் தோற்று தொடரை ஏற்கெனவே இழந்த பங்களாதேஷ், ஹராரேயில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியில் ஆறுதல் வெற்றி பெற்றதன் மூலம் 1-2 என தொடரை இழந்திருந்தது.

ஸ்கோர் விவரம்:


நாணயச் சுழற்சி: சிம்பாப்வே

பங்களாதேஷ்: 256/9 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: அஃபிஃப் ஹொஸைன் ஆ.இ 85 (81), அனாமுல் ஹக் 76 (71), மகமதுல்லா 39 (69) ஓட்டங்கள். பந்துவீச்சு: லுக் ஜொங்வி 2/38, பிராட் இவான்ஸ் 2/53, சிகண்டர் ராசா 1/42, றிச்சர்ட் நகரவா 1/51)

சிம்பாப்வே: 151/10 (32.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: றிச்சர்ட் நகரவா ஆ.இ 34 (27), விக்டர் நயுச்சி 26 (31), கிளைவ் மடன்டே 24 (45) ஓட்டங்கள். பந்துவீச்சு: முஸ்தபிசூர் ரஹ்மான் 4/17, தஜியுல் இஸ்லாம் 2/34, எபொடொட் ஹொஸைன் 2/38, ஹஸன் மஹ்மூட் 1/38, மெஹிடி ஹஸன் மிராஸ் 1/16)

போட்டியின் நாயகன்: அஃபிஃப் ஹொஸைன்

தொடரின் நாயகன்: சிகண்டர் ராசா




# செல்சி செல்லும் உபமெயாங்?

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் முன்களவீரரான பியர் எம்ரிக் உபமெயாங்கை இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சி கைச்சாத்திடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாண்டு பெப்ரவரி மாதத்திலேயே இன்னொரு பிறீமியர் லீக் கழகமான ஆர்சனலிலிருந்து பார்சிலோனாவில் உபமெயாங்க் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சீனா


மக்களே உஷார்; உலக நாடுகளை

# அச்சுறுத்தும் ‘லாங்யா’

சீனாவில் கொரோனா போன்று ‘லாங்யா‘ (Langya) என்ற புதிய வைரஸ் தொற்று பரவி வருகின்றது. இவ் வைரஸ் விலங்குகளில் இருந்து மனிதர்களுக்கு பரவி இருக்கலாம் என அறிவியல் விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

கிழக்கு சீனாவில் உள்ள மக்களுக்கு திடீர் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. இதனை அடுத்து மேற்கொண்ட சோதனையின் போது இந்த வைரஸ் பற்றி மருத்துவர்கள் கண்டுபிடித்து இருக்கின்றனர்.

இந்நிலையில் இவ் வைரஸ் தொற்றினால் சீனாவில் உள்ள ஷன்டங் மற்றும் ஹனன் மாகாணத்தில் 35 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், இவ் வைரஸ் தாக்குதலுக்கு ஆளானவர் காய்ச்சல், இருமல், உடல் இளைப்பு, உடல் சோர்வு, குமட்டல் மற்றும் தசை பிடிப்பு போன்ற அறிகுறிகள் உடன் காணப்படுவதாகவும் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.



மேலும் லாங்யா வைரஸ் தாக்குதலை தடுப்பதற்கு இதுவரை மருந்து கண்டுபிடிக்கவில்லை எனவும் , இவ் வைரஸ் தொற்றினால் இதுவரை எந்த உயிரிழப்புக்களும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த வைரஸ் தாக்குதலுக்கு உள்ளானவர்களை வேறு சில மாற்று மருந்துகள் கொடுக்கப்பட்டுள்ளதாக சில மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

முன்னதாக வெளியிடப்பட்ட ஒரு ஆய்வில் 2019 ஆம் வருடம் லாங்யா வைரஸ் முதன் முதலில் மனிதர்களிடையே கண்டறியப்பட்டிருப்பதாக கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

பிரேசில்



# விஷம் வைத்து கொல்லப்படும் குரங்குகள்

உலகம் முழுவதிலும் குரங்கு அம்மை நோய் வேகமாக பரவி வருகிறது. இதுவரை 90 நாடுகளில் சுமார் 29,000 பேர் குரங்கு அம்மை நோய் பாதிப்புக்கு ஆளாகி இருக்கும் நிலையில், உலக சுகாதார ஸ்தாபனம் சர்வதேச சுகாதார நெருக்கடியை அறிவித்துள்ளது. இந்த நோய் மனிதர்களிடம் இருந்து மனிதர்களுக்கு பரவக்கூடியது ஆகும். இந்நிலையில் பிரேசிலில் குரங்கு அம்மை நோய் பீதியால் குரங்குகள் அதிக அளவு தாக்குதல்களுக்கு உள்ளாகி வருகின்றன.

குரங்குகளிடம் இருந்து நோய் பரவுகிறது என்கிற தவறான எண்ணத்தில் பிரேசில் மக்கள் குரங்குகளை கொலை செய்து வருகின்றனர். அந்நாட்டின் மிகப்பெரிய நகரமான ரியோ டீ ஜெனிரோவில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 10 குரங்குகள் விஷம் வைத்து கொல்லப்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதே போன்ற சம்பவங்கள் நாட்டின் பிற நகரங்களிலும் நடந்துள்ளதாக கூறப்படுகிறது. இதனிடையே குரங்கு அம்மை நோய் பீதியால் குரங்குகள் கொல்லப்படுவது குறித்து உலக சுகாதார ஸ்தாபனம் மிகுந்த கவலை தெரிவித்துள்ளது.

உலக சுகாதார அமைப்பின் செய்தி தொடர்பாளர் மார்கரெட் ஹாரிஸ் இதுப்பற்றி கூறுகையில் “இப்போது நாம் பார்க்கும் நோய் பரவல் மனிதர்களிடையே உள்ளது என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். எனவே மக்கள் நிச்சயமாக விலங்குகளைத் தாக்கக்கூடாது” எனக் கூறினார்.

பிரேசிலில் இதுவரை 1,700 பேர் குரங்கு அம்மை நோயால் பாதிக்கப்பட்டுள்ளதும், அங்கு இந்த நோய்க்கு ஒருவர் உயிரிழந்ததும் குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனி

கடலில் கொட்டப்பட்ட இரசாயன ஆயுதங்கள்;

# அதிர்ச்சியில் உலக நாடுகள்

இரண்டாம் உலகப்போரில் ஐரோப்பா முழுவதையும் பிடிக்க ஹிட்லரின் படைகள் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டன. இதன் காரணமாக அதி பயங்கரமான இரசாயன ஆயுதங்களை ஜேர்மனி அரசு உருவாக்கியது.

எவ்வாறு இருப்பினும் ஹிட்லரின் மறைவுக்கு பின்னர் இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்ததால் நாசி படையினரிடம் இருந்த இரசாயன ஆயுதங்களை அழிக்க பிரித்தானியா, அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் உத்தரவிட்டன. இதனையடுத்து பால்டிக் கடலின் மையப் பகுதியான Gotland Basin இல் ஆயுதங்கள் மூழ்கடிக்கப்பட்டன.

இந்நிலையில், பால்டிக் கடலில் போலந்து அறிவியல் அக்கடமி, கடந்த சில வருங்களாக பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது. அந்தவகையில் இது குறித்து அண்மையில் வெளியான ஆய்வு முடிவானது, உலக நாடுகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை



ஏற்படுத்தியுள்ளது.

குறித்து ஆய்வு அறிக்கையில், கடலில் கொட்டப்பட்ட இராசாய ஆயுதங்கள் 70 மீற்றர் சுற்றளவு வரை கடலை மாசுபடுத்துகின்றன. நீர்வாழ் தாவரங்கள், விலங்கினங்கள் இதனால் பெரும் தாக்கத்தைச் சந்தித்து வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், பால்டிக் கடற்பரப்பில் குவிக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகள், பீப்பாய்கள், குண்டுகள் உள்ளிட்ட ஆயுதங்களின் சரியான அளவை மதிப்பிடுவது கடினம் என்றாலும், அவை 40,000 முதல் 100,000 தொன் வரை இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான்

கடும் பொருளாதார நெருக்கடியில்


# சிக்கித் தவிக்கும் பாகிஸ்தான்

பாகிஸ்தான் அரசானது கடந்த சில மாத காலமாகக் கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்து வருகிறது.

இந்நிலையில் இப் பொருளாதார நெருக்கடி காரணமாக, லாகூரில் உள்ள மிருகக்காட்சி சாலையில் உள்ள சிங்கங்களை ஏலத்தில் விட இருப்பதாக பாகிஸ்தான் அரசு அறிவித்துள்ளது.

சிங்கங்களுக்கு உணவு அளிக்க முடியாத சூழ்நிலையாலும், பராமரிப்பு செலவை குறைக்கும் விதத்திலும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், இந்த மிருகக்காட்சிசாலையில் தற்போது 29 சிங்கங்கள் உள்ளன எனவும், இவற்றுள் இரண்டு முதல் ஐந்து வயதுக்குட்பட்ட 12 சிங்கங்களை ஏலத்தில்



விட முடிவு செய்யப்பட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இதுகுறித்து, இந்த மிருகக்காட்சி சாலையின் துணை இயக்குநர் தன்வீர் அஹமது ஜான்ஜுவா, “இந்த விற்பனையின் மூலமாக சிங்கங்களின் எண்ணிக்கையை குறைப்பதோடு, செலவினங்களையும் குறைக்க முடியும். அத்துடன் ஏலத்தில் யார் வேண்டுமானாலும் கலந்துகொள்ளலாம்” என்றார்.


அமெரிக்கா

நிதி மோசடி வழக்கு;

# மீண்டும் சர்ச்சையில் சிக்கிய ட்ரம்ப்

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியான டொனால்ட் ட்ரம்ப் அந்நாட்டின் மிகப் பெரிய தொழில் அதிபரும் ஆவார்.

குறிப்பாக அவர் ரியல் எஸ்டேட், நட்சத்திர ஹோட்டல் உள்ளிட்ட பல்வேறு தொழில்களை செய்து வருகின்றார்.



இந்நிலையில் ட்ரம்பின் நிறுவனம் கடந்த 15 ஆண்டுகளாக நிதி மோசடி மற்றும் வரி ஏய்ப்பில் ஈடுபட்டதாகக் குற்றசாட்டு எழுந்துள்ளது.

இதுகுறித்து ட்ரம்ப், அவரது நிறுவனம் மற்றும் அவரின் குடும்ப உறுப்பினர்கள் மீது நியூயோர்க் மாகாண நீதித்துறை வழக்கு பதிவு செய்து நீண்ட காலமாக விசாரணை நடத்தி வருகிறது.

இந்நிலையில் இந்த வழக்கு தொடர்பான விசாரணைக்காக முதல் முறையாக ட்ரம்ப் நியூயோர்க் மாகாண அட்டர்னி ஜெனரல் அலுவலகத்தில் ஆஜர் ஆனார்.

பிரித்தானியா

பாட்டியின் கல்லறையைக் கண்டு

# அதிர்ச்சியடைந்த யுவதி

தனது பாட்டியின் கல்லறையில் இருந்த வாசகத்தைக் கண்டு அதிர்ச்சி அடைந்த சம்பவம், பிரித்தானியாவில் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து, அப் பெண் கூறுகையில், “பாட்டி 40 வயதில் உயிரிழந்தார். அப்பொழுது எனது தாய்க்கு 20 வயது. பாட்டி இறந்து, பத்து ஆண்டுகளுக்கு பிறகு நான் பிறந்தேன். தன்னுடைய தாயின் இழப்பு, தன்னை மிகவும் பாதித்திருந்ததால், அவரின் கல்லறைக்கு எனது தாய் ஒரு முறை கூட சென்றதில்லை. இதனால், பாட்டியின் கல்லறை எங்கு இருக்கின்றது என்பது கூட எனக்கு தெரியவில்லை. பாட்டி இறந்து சுமார் 30 ஆண்டுகளுக்கு பிறகு, வேல்ஸ் பகுதிக்கு வந்திருந்த நான், பாட்டியின் கல்லறைக்கு செல்ல வேண்டும் என முடிவு செய்திருந்தேன். பாட்டியின் கல்லறையை போய் பார்த்த போது, அதில் ‘அதிகம் அன்புள்ள பாட்டி’ (a dotting grandmother) என்று இருப்பதற்கு பதிலாக, அதில் அவர் ஒரு ‘தத்தெடுக்கப்பட்ட பாட்டி’ (adopting grandmother) என்ற எழுத்து பிழை இருந்தது. கடந்த 30 வருடமாக, ஒருவர் கூட இதனை கவனிக்கவில்லை என்பதை நினைத்து மிகவும் மன வேதனை அடைந்தேன்” என அந்த பெண் குறிப்பிட்டுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 12 ஒகஸ்ட் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.